219262

1989 - 9 - 21

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 18 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1988, திசெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.20

தபாற் செலவு : ரூபா 2.30

219262

# 1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

பாராளுமன்ற நூலகம் ... 1989 -9-21 ஸ்ரீ லங்கா SRI LANKA இலங்கை

[1988 திசெம்பர் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 49/85

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறன அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இதனகத்துப் பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) — சுருக்கப்பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 5 ஆம் பிரிவானது, "தீர்வை" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து, பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— — 101 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"" பிசுக்கால்" என்பது பிரதிப் பிசுக்கால் ஒருவரையும் உள்ளடக்கும்"

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவானது, இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:— — முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கிரம முறையான வழக்கு பிராது மூலம் தொடங்கப்படுதல்.

39. கிரம முறை நடவடிக்கையிலான ஒவ்வொரு வழக்கும் முறையாக முத்திரையிடப்பட்ட, எழுத்திலான ஒரு பிராதை நீதிமன்றத்தின் அல்லது அதற்கென நீதிமன்றம் நியமிக்க வேண்டிய அத்தகைய அலுவலரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் கொடுக்கப்படுதல் வேண்டும். பிராதானது, எத்தனை எதிராளிகள் உளரோ அத்தனை எண்ணிக்கையினவானவையும் முதலாம் அட்டவணையிலுள்ள 16 ஆம் இலக்கப் படிவத்திலமைந்தவையுமான அழைப்புக் கட்டளைகளுடனும், சொல்லப்பட்ட அட்டவணையிலுள்ள 17 ஆம் இலக்கப் படிவத்தில் அமைந்த நீதிமன்றப் பணிப்பாணையொன்றுடனும் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— — முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (ஒ) என்னும் பந்தியில், "அத்தகைய காலத்தினுள் திருத்தப்படாதபோது," என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய காலத்தினுள் திருத்தப்படாதபோது,"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

2—எ 103517—3,050 (05/88)

(2) அதன் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(ஓ) எத்தனை எதிராளிகள் உளரோ அத்தனை எண்ணிக்கையினவான அழைப்புக்கட்டளைகளுடன் பிராதானதுசேர்த்துச் சமர்ப்பிக்கப்படாதபோது,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(1) பிராது கோப்பிடப்பட்டு, 49 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட பிரதிகள் அல்லது சுருக்கக் கூற்றுக்கள் கொடுக்கப்பட்டதன் மேல், நீதிமன்றம், முதலாம் அட்டவணையிலுள்ள 16 ஆம் இலக்கப் படிவத்திலமைந்ததும், நீதிமன்றப் பதிவாளரினால் கையொப்பமிடப்பட்டதும், அழைப்புக் கட்டளையிற் குறித்துரைக்கப்பட வேண்டிய, நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாத நாளொன்றாக இருக்கும் அத்தகைய ஒரு நாளன்று அல்லது அதன் முன்னர் அப் பிராதுக்கு மறுமொழி அளிக்குமாறு எதிராளியைத் தேவைப்படுத்துவதுமான ஓர் அழைப்புக் கட்டளை வழங்கப்பட வேண்டுமென்று கட்டளையிடுதல் வேண்டும். அழைப்புக் கட்டளையானது, நீதிமன்ற மொழியைத் தமது மொழியாகக் கொண்டிராத எதிராளியின் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட அத்தகைய பிரதியுடனும் அல்லது சுருக்கக் கூற்றுடனும் சேர்த்து, சொல்லப்பட்ட அட்டவணையிலுள்ள 17 ஆம் இலக்கப் படிவத்தில் அமைந்த அல்லது அப்பயன்பட அமைந்த ஒரு நீதிமன்றப் பணிப்பாணையின் கீழ் அந்நீதிமன்றத்தின் பிசுக்காலிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும், அல்லது எதிராளி நியாயாதிக்கமுள்ள எந் நீதிமன்றத்தினது நியாயாதிக்க இடப்பிரதேச எல்லைகளுக்குள் வசிக்கின்றாரோ, அந்நீதிமன்றத்தின் பிசுக்காலிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்; அவர் அந்த எதிராளிக்கு அல்லது எதிராளிகள் ஒருவருக்கதிகமானால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அதனை முறையாகச் சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டுமென்பதுடன் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைப் போன்று, அதன் உண்மையான சேர்ப்பிப்பு எவ்வலுவலருக்குப் பொறுப்பிக்கப்பட்டதோ அவ்வலுவலரின் சரியென்று முறையான அத்தாட்சிப்படுத்தலுடன் கூடிய அதனையும், அதன் நிறைவேற்றத்தையும் நீதிமன்றத்துக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்:

ஆயின், மேலே குறித்துரைக்கப்பட்டவாறு நீதிமன்றப் பிசுக்காலானவர், தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாக எதிராளியிடம் அழைப்புக் கட்டளையைச் சேர்ப்பிக்கத் தவறுகின்றவிடத்து, எதிராளியானவர் பிராதுக்கு மறுமொழியிறுக்க முதற்றடவையாக எத்தேதியன்று தேவைப்படுத்தப்பட்டாரோ, அத்தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாத இன்னொரு தேதிக்கு, அழைப்புக் கட்டளை திருப்பிச் சேர்ப்பிக்கப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியை, நீதிமன்றமானது அதன் தற்றுணிபின்பேரில் நீடிக்கலாம்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"இலங்கைக்கு வெளியே அழைப்புக் கட்டளை சேர்ப்பித்தலுக்கு அனுமதியளிக்கும் கட்டளை.

70. இலங்கைக்கு வெளியே அழைப்புக் கட்டளை சேர்ப்பித்தலுக்கு அனுமதியளிக்கும் கட்டளை ஒவ்வொன்றும் அத்தகைய சேர்ப்பித்தலானது எவ்விதத்தில் செய்யப்படல் வேண்டுமென்பதைப் பணித்தல் வேண்டுமென்பதுடன், எதிராளியானவர் அழைப்புக் கட்டளையிற் குறித்துரைக்கப்படும், இலங்கைக்கு வெளியே அழைப்புக் கட்டளை சேர்ப்பிப்பதற்கான கட்டளைத் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாத தேதியொன்ருக இருக்கும் அத்தகைய தேதியன்ருே அல்லது அதற்கு முன்னரோ தமது மறுமொழியைக் கோப்பிடுதல் வேண்டுமெனவும் 55 ஆம் பிரிவின் ஏனைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமெனவும் பணித்தலும் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவானது, "அந்த நீதிமன்றத்திஞல் நிர்ணயிக்கப்படவேண்டிய ஒரு காலத்தினுள்ளாகத் திருத்தஞ் செய்யப்படுவதற்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மறுமொழி அவ்வாறு திருப்பியனுப்பப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்தை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்குள்ளாகத் திருத்தஞ்செய்யப்படுவதற்காக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவானது, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.

"விளக்கத்துக்கான நாள்.

80. எதிராளியின் மறுமொழியைக் கோப்பிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நாளன்று அல்லது எதிர் மறுமொழி அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து அத்தகைய எதிர் மறுமொழியைக் கோப்பிடுதற்கு நிர்ணயிக்கப்பட்ட நாளன்று, அத்துடன் அது கோப்பிடப்பட்டாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி, நீதிமன்றமானது, வழக்கு விளக்கத்துக்கு நாளொன்றை நியமித்தல் வேண்டும். அத்துடன் 55 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினல் ஏற்பாடு செய்யப்பட்டவாருக, பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றைக் கொடுத்துதவியுள்ளதோடு அத்தகைய அறிவித்தலைச் சேர்ப்பிப்பதற்கான செலவையும் கொடுத்துள்ளவர்களான எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் பதிவஞ்சல் மூலம் எழுத்தில் அதுபற்றிய அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 93 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப் பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

" வழக்குரை களைத் திருத்து தல்.

93. (1) நீதிமன்றமானது, விதிவிலக்கான சூழ்நிலை களிலும்; அத்துடன் பதியப்படவேண்டிய காரணங் களுக்காகவும், வழக்கின் ஏதேனும் விசாரணையின்போது அல்லது இறுதித் தீர்ப்புக்கு முன்னர் அந்த வழக்குக் கான எல்லாக் கட்சிக்காரர்களினதும் முன்னிலையில் அல்லது அவர்களுக்கு நியாயமான அறிவித்தல் கொடுத்த பின்னர் எந்நேரத்திலும், சேர்ப்புக்களைச் செய்வதன் மூலம் அல்லது மாற்றங்களைச் செய்வதன் மூலம் அல்லது வழக்குரைகளிலிருந்து அல்லது மன் றாணைகளிலிருந்து எவற்றையேனும் விட்டுவிடுவதன் மூலம் அவ்வழக்கின் எல்லா வழக்குரைகளையும் மன் றாணைகளையும் திருத்தலாம்.

(2) திருத்தஞ்செய்வதற்காக இப்பிரிவின்கீழ் ஆக்கப் படும் கட்டளை ஒவ்வொன்றும் செலவு தொகைகள் சம் பந்தமாகவும் மறுமொழி அல்லது எதிர் மறுமொழி கோப்பிடுவதற்கென அல்லது அந்த வழக்கை விசாரிப் பதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியைப் பின்போடுதல் சம்பந்தமாகவும் அல்லது வேறுவிதமாகவும் நீதிமன்றம் தகுந்ததெனக் கருதும் அத்தகைய நியதிகளின்பேரில் இருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழான கட்டளையொன்றைப் பின் பற்றிச் செய்யப்படும் திருத்தங்கள் அல்லது சேர்ப்புக் களானவை அக்கட்டளையினால் பாதிக்கப்பட்ட வழக் குரையின் மேல் அல்லது மன்றாணையின்மேல் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்; அல்லது இவ்விதம் செய்தல் வசதியீனமாக இருந்தால் மாற்றப்பட்ட வாறான அந்த ஆவணத்தின் திருத்தமான ஒரு வரைவு திருத்தஞ்செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள ஆவணத் துடன் சேர்க்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அத்த கைய திருத்தம் அல்லது மாற்றம் ஒவ்வொன்றும் நீதி பதியினால் முதலெழுத்தொப்பமிடப்படுதல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத் தின் 143 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 143 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (1) வழக்கின் எந்தக் கட்டத்திலாவது, போதிய காரணங்காட்டப் பட்டால், நீதிமன்றம், கட்சிக்காரர்களுக்கு அல்லது அவர்களெவருக் காவது கால அவகாசமளிக்கலாம் : அத்துடன் அவ்வழக்கின் விசாரணை யினைக் காலத்துக்குக் காலம் ஒத்திவைக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் தவிரவும், வழக்குப் பதிவேட்டிற் பதியப்படவேண்டிய காரணங்களுக்காகவும் ஆறு வாரங்களுக்கு மேற்பட்ட ஒத்திவைப்பு எதுவும் வழங்கப்படலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 183 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 183 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (ஆ) என்னும் பந்தியில் "(சத்தியம் எடுத்தோதுவிப்பதற்கான ஆணையாளர்" என்னும் மகுடப்பெயர் சூட்டப்படவேண்டிய' எந்த அலுவலரும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(சத்திய ஆணையாளர் என்னும் மகுடப் பெயர் சூட்டப்படவேண்டிய) எந்த அலுவலரும்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) சத்தியக் கடுதாசி எந்நாட்டில் சத்தியஞ் செய்யப்படுகிறதோ அல்லது உறுதிப்படுத்தப்படுகின்றதோ அந்நாட்டின் சட்டப்படி சத்தியத்தின்மேல் அல்லது உறுதிப்படுத்தலின்மேல் எடுத்தோதுவிப்பதற்குத் தகுதிபெற்ற ஆளெவரும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 183அ, 183ஆ ஆகிய புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 183 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 183அ, 183ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

"வழக்குக்கான கட்சிக்காரருக்குப் பதிலாக எவர் சத்தியக் கடுதாசி முடிக்கலாமென்பது.

183அ. இச்சட்டக்கோவையினது ஏற்பாடுகளின்கீழ் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சத்தியக்கடுதாசியொன்றை முடிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டவிடத்து—

(அ) வழக்கு நடவடிக்கையானது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவருக்கு எதிராக கொண்டு வரப்படும்போது, அரசின் அலுவலர் எவரும்; அத்துடன்

(ஆ) வழக்கு நடவடிக்கையானது கூட்டுத்தாபனம், சபை, பகிரங்கக் குழு அல்லது கம்பெனி ஒன்றினால் அல்லது இவற்றுக்கு எதிராகக் கொண்டுவரப்படும்போது அத்தகைய கூட்டுத்தாபனத்தின், சபையின், பகிரங்கக் குழுவின் அல்லது கம்பெனியின் செயலாளர், பணிப்பாளர் அல்லது வேறு பிரதான உறுப்பினர், அலுவலர் எவரும்; அத்துடன்

(இ) எவரேனும் கட்சிக்காரர் இலங்கையில் இல்லாதிருக்குமிடத்து, விடயத்திற்கேற்றற்போல வழக்கைக் கொணர்ந்து, நடாத்துவதற்கு அல்லது எதிர்வாதிடுவதற்கு முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அவரது தரணி ; அத்துடன்

(ஈ) வழக்குக்கான எவரேனும் கட்சிக்காரர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட கட்சிக்காரர்கள் இருந்தால், அத்தகைய கட்சிக்காரர் இலங்கையில் இருக்கும் அத்தகைய கட்சிக்காரர் அல்லது இப்போது மேலே குறிப்பிட்டவரைப் போன்ற அக்கட்சிக்காரரது அல்லது எதிராளியினது அத்தகைய பதிவு பெற்ற தரணி, என்போர் தாம் நேராக அறிந்திராத காரணத்தினுல் அல்லது உடல் அல்லது மனத்தளர்ச்சி காரணத்தினுல், தேவைப்படுத்தப்படும் அந்தச் சத்தியக்கடுதாசியை முடிக்க முடியாதவராகவிருக்கும்போது, அப்போது, அந்தக் கட்சிக்காரரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் எவரும்,

வழக்குக்கான கட்சிக்காரருக்குப் பதிலாக, அக்கருமங்கள் தொடர்பில் சத்தியக்கடுதாசியொன்றை முடிக்கலாம் :

ஆயின், முற்போந்த சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும், விடயத்துக்கு ஏற்றவாறு வழக்குக்கான கட்சிக்காரருக்குப் பதிலாகச் சத்தியக்கடுதாசியை முடிக்கின்ற ஆள், அந்த வழக்கு நடவடிக்கைக்குக் காரணமான நிகழ்வுகள் பற்றித் தாமே நேரடியாக அறிந்த ஆளொருவராக இருத்தல் வேண்டும். அத்துடன் அவர் தம்முடைய சத்தியக் கடுதாசியில் அதன்கண் அடங்கியுள்ள விடயத்தைப் பற்றி நேரடியாகத் தாம் அறிந்தவற்றின் பேரிலேயே தாம் சாட்சியங் கூறுவதாக, அவர் சத்தியம் செய்தல் வேண்டும் அல்லது உறுதியுரையளித்தல் வேண்டும். அத்துடன், நீதிபதியினது தற்றுணிபின்பேரில், சத்தியக் கடுதாசியானது வழக்குக்கான கட்சிக்காரினுல் முடிக்கப்பட்டிருந்தால், அவர் அதன்கண் காணப்படும் விடயப்பொருள் தொடர்பாக எப்படி விசாரணை செய்யப்பட்டிருப்பாரோ அதே முறையில் விசாரணை செய்யப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

**183அ என்னும் பிரிவின்கீழ் செய்யப்பட்ட வேண்டுமென்ற பொய்யான கூற்றுக்கான தண்டனை.**

183ஆ. எவரேனும் ஆள் மேற் சொல்லப்பட்ட நடவடிக்கைகள் எதன்போதும் சத்தியக்கடுதாசி மூலமோ அல்லது வேறுவகையாகவோ ஏதேனும் பொய்யான கூற்றை வேண்டுமென்று செய்தால், அத்தகைய கூற்றானது சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின் மீது இருக்குமாயின் பொய்யான சாட்சியம் அளித்த தவறுக்காக தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் விளங்கப்பட்டு தண்டிக்கப்படுவதற்கு அவருக்குள்ள பொறுப்புக்கு மேலதிகமாக நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக அவர் தண்டிக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 325 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 325 ஆம் பிரிவானது, அதன் (4) ஆம் உட்பிரிவில் "மனு பற்றிய விசாரணையுடன் சேர்த்து மேற்கொள்ளப் படுதலும் வேண்டும்" என்றும் சொற்களுக்குப் பதிலாக "மனு பற்றிய விசாரணையுடன் சேர்த்து மேற்கொள்ளப்படுதலும் வேண்டும். அத் தகைய புலனுய்வு, அத்துடன் விசாரணை ஒவ்வொன்றும் (2) ஆம் உட் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலி ருந்து அறுபது நாட்களுக்குள்ளாக முடிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 326 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 326 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "விழலான தெனவும் அல்லது அலைக்கழிக்கும் தன்மை கொண்டதெனவும் அல்லது" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "நல்லெண்ணத்துட னல்லாதது என அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூல மும்; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கி விடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 327 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 327 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) "எதிர்ப்பு அல்லது தடை அல்லது வெளியேற்றுகை," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எதிர்ப்பு, தடை, தடங்கல் அல்லது வெளியேற்றுகை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத் துடன்

(2) "நீதிமன்றமானது மனுவைத் தள்ளுபடி செய்து கட்டளையை ஆக் குதல் வேண்டும்" என்னும், சொற்களுக்குப் பதிலாக, "நீதிமன்ற மானது அத்தகைய உரிமை அல்லது அக்கறை நிலைநாட்டப்பட் டுள்ளதாகக் கண்டால், மனுவைத் தள்ளுபடி செய்து கட்ட ளையை ஆக்குதல் வேண்டும்". என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 327அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 327 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக் கத்தின் 327அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"உரிமைக் கோரிக்கையானது ஆதனத்தின் பங்கொன்றுக்கு மட்டும் நிலைநாட்டப்படு கின்றவிடத்து.

327அ. ஏதேனும் ஆதனத்தின் பங்கொன்றுக்கு மட் டுமே உரிமைக் கோரிக்கை எதுவும் நிலைநாட்டப்பட் டுள்ளவிடத்து, முற்போந்த பிரிவுகளின் கீழ் ஆக்கப் படும் கட்டளை எதிலும், அவ்வாதனத்தின் எத்தகைய பங்கு தொடர்பில் உரிமைக் கோரிக்கை எதுவும் நிலை நாட்டப்படவில்லையோ அத்தகைய பங்கின் உடைமை யில் தீர்ப்புக்கடன் பெறுநர் அமர்த்தப்படுதல் வேண்டு மென அல்லது மீள அமர்த்தப்படுதல் வேண்டுமெனப் பணிப்பதற்கு, நீதிமன்றம் தகுதி வாய்ந்ததாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 328 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 328 ஆம் பிரிவானது, "நீதிமன்றம் கட்டளை மூலம் பணித்தல் வேண்டும்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "நீதிமன்றம் கட்டளை மூலம் பணித்தல் வேண்டும். இப்பிரிவின் கீழான விசாரணை ஒவ்வொன்றும் ஆட்சேபனைகள் கோப்பிடுவதற்கு நிர்ணயிக்கப் பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக முடிக்கப்படுதல் வேண்டும்." என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 338 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 338 ஆம் பிரிவானது அதன் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(ஆ) "சட்டப் பிரதிநிதி" என்பது மரணசாதன நிறைவேற்றுநர் என்று அல்லது மரணச்சொத்து திருவாகி என்று அல்லது மரபுரிமையை ஏற்று உரித்தாளராக வந்துள்ள கிட்டிய உறவினர் என்று பொருளாகும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 341 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 341 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட் பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(1அ) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப் பட்டதன்மேல் இறந்து போனவரினது பெயருக்குப் பதிலாக சட்டப் பிரதிநிதியின் பெயரை பதிவேட்டில் நீதிமன்றமானது பதிதல் வேண்டுமென்பதுடன் தீர்வை நிறைவேற்றப்படுவதற் கான விண்ணப்பத்தைத் தீர்மானிக்க முற்படுதலும் வேண்டும்."; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட் பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:—

"(3) தீர்வை முற்றாக நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் தீர்ப் புக் கடன்பெறுநர் இறந்துபோனால், இறந்து போனவரினது பெயருக்குப் பதிலாகத் தமது பெயர் பதிவேட்டில் பதியப்படுவ தற்கு சட்டப் பிரதிநிதி நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்; அத்துடன் நீதிமன்றமானது, அதன்மேல் அவரது பெயரைப் பதிவேட்டில் பதிதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 394 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 394 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் "சட்டப்பிரதிநிதி" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கி விட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"சட்டப்பிரதிநிதி" என்பது நிறைவேற்றுநர் என்று அல்லது திரு வாகி என்று அல்லது மரபுரிமையை ஏற்று உரித்தாளராக வந்துள்ள கிட்டிய உறவினர் என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 437 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 437 ஆம் பிரிவானது "சத்தியத்தை எடுத்தோதுவிக்கும் ஆணையாளரின்" என்னும் சொற்கள் தொடக்கம் அப் பிரிவின் முடிவுவரை உள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, பின் வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"சத்தியக் கடதாசியின் மீது சாட்சியம்.

"சத்தியத்தை எடுத்தோதுவிக்கும் ஆணையாளரின் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள நாடொன்றில் சத்தியக்கடுதாசி எடுத்து மொழியப்பட்ட அல்லது உறுதிப் படுத்தப்பட்ட விடயத்தில், அந்நாட்டுச் சட்டத்தின்படி சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவிக்கத் தகுதியுடைய எவரேனும் ஆளின் முன்னிலையில் சத்தியஞ் செய்யப்படலாம் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட விடயத்தில், அந்நாட்டுச் சட்டத்தின்படி சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவிக்கத் தகுதியுடைய எவரேனும் ஆளின் முன்னிலையில் சத்தியம் செய்யப்படலாம் அல்லது உறுதிப்படுத்தப்படலாம்; அத்துடன் சத்தியக் கடுதாசியானது அதன் முகப்பில் நீதிமன்றத்தின் பெயரையும் வழக்கின் இலக்கத்தையும் கட்சிக்காரர்களின் பெயர்களையும் கொண்டிருக்கின்றதென்னும் நிகழ்வானது அத்தகைய சத்தியத்தை அல்லது உறுதியுரையை அத்தகைய நீதிமன்றத்துக்கு அல்லது சமாதான நீதிவானுக்கு அல்லது சத்தியத்தை எடுத்தோதும் ஆணையாளருக்கு அல்லது தகுதியுடைய அத்தகைய ஆளுக்கு போதிய அதிகாரமளிப்பதாதல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 438 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 438 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:—

"வெளிப்படுத்துநரினால் சத்தியக் கடுதாசி ஒப்பமிடப்படல் வேண்டும்.

438. முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்யப்படுகின்ற சத்தியக் கடுதாசி ஒவ்வொன்றும் நீதிமன்றத்தினது, சமாதான நீதிவானினது அல்லது சத்திய ஆணையாளரினது முன்னிலையில் அல்லது தகுதியுடைய எந்த ஆளினது முன்னிலையில் அது எடுத்து மொழியப்படுகிறதோ அல்லது உறுதிப்படுத்தப்படுகிறதோ அந்த ஆளினது முன்னிலையில் வெளிப்படுத்துநரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 439 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 439 ஆம் பிரிவானது, அப்பிரிவில் "சமாதான நீதிவானின் அல்லது ஆணையாளரின்" என்ற சொற்கள் எங்கெங்கு காணப்படுகின்றனவோ, அங்கங்கெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக சமாதான நீதிவானின், "சத்திய ஆணையாளரின் அல்லது தகுதியுடைய எந்த ஆளுக்கு முன்னர் அது எடுத்துமொழியப்படுகின்றதோ அல்லது உறுதிப்படுத்தப்படுகிறதோ, அந்த ஆளின்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 440 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 440 ஆம் பிரிவானது "சமாதான நீதிவானின் அல்லது ஆணையாளரின் முன்பாக உறுதிப்படுத்தப்படுகின்றதோ அல்லது சத்தியஞ் செய்யப்படுகின்றதோ அந்த நீதிபதியினுல் சமாதான நீதிவானுல் அல்லது ஆணையாளரினுல்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "சமாதான நீதிவானின் அல்லது சத்திய ஆணையாளரின் அல்லது தகுதியுடைய எந்த ஆளின் முன்பாக உறுதிப்படுத்தப்படுகின்றதோ அல்லது சத்தியஞ் செய்யப்படுகின்றதோ அந்த நீதிபதியினுல், சமாதான நீதிவானுல், சத்திய ஆணையாளரினுல் அல்லது தகுதி உடைய அந்த ஆளினுல்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 519 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 519 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய ஏதேனும் விண்ணப்பம் செய்யப்பட்டதன் மேலும், அத்துடன் அத்தகைய ஏதேனும் விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தாலும் சரி அல்லாவிடினுஞ்சரி மரண சாதனக்காரரின் மரணச்சொத்தின் பெறுமதி இருபதினுயிரம் ரூபாவாக இருக்கின்ற அல்லது அதனை விஞ்சுகின்ற ஒவ்வொரு விடயத்திலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஏதேனும் விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்"; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில், "மரணச் சொத்தின் பெறுமதியானது இருபதினுயிரம் ரூபாவாக அல்லது அதற்கு மேலாக இருக்கின்றவிடத்து, மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் கட்டாயமாகும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மரண சாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 522 ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 522 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஈ), (ஊ) என்னும் பந்திகளை முறையே (இ), (ஈ) என்னும் பந்திகளென மீள எழுத்திடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 524 ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 524 ஆம் பிரிவானது, அதன் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(4) மனுதாரர் தமது மனுவுடன் பின்வருவனவற்றைச் சேர்த்தனுப்புதல் வேண்டும்:—

(அ) பின்னுறுதிக் கட்டளையின் வரைவுப் பிரதி;

(ஆ) பின்னுறுதிக் கட்டளைக்கும், அதனைச் சேர்ப்பிப்பதற்கும் தேவைப்படும் முத்திரைகள்;

(இ) முதலாம் அட்டவணையிலுள்ள 84அ என்னும் இலக்கப் படிவத்திலான பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தலின் வரைவுப் பிரதி;

(ஈ) அவரது விண்ணப்பத்துக்குச் சம்மதிக்கும் அத்தகைய எதிர்வாதிகளின் எழுத்திலான சம்மதம்.".

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 525 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 525 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) மனுதாரர் தமது மனுவுடன் பின்வருவனவற்றைச் சேர்த்தனுப்புதல் வேண்டும்:—

(அ) முற்றுன கட்டளையின் வரைவுப் பிரதி;

(ஆ) அத்தகைய முற்றுன கட்டளைக்குத் தேவைப்படும் முத்திரைகள்;

(இ) முதலாம் அட்டவணையிலுள்ள 84ஆ என்னும் இலக்கப் படிவத்திலான முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தலின் வரைவுப் பிரதி.".

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 530 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 530 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"மரணசாதனமில்லாதவிடத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுவதற்காக விண்ணப்பிக்கும் விதமும் என்பிக்கும் விதமும்.

530. (1) எவரேனும் ஆள் இலங்கையில் மரணசாதனமெழுதாதிறக்கும்போது அல்லது அவர் மரணசாதனமெழுதியிருந்து, அம்மரணசாதனம் காணமுடியாதிருந்து, அது காணப்படாதிருக்கும்வரை அவருடைய மரணச் சொத்துக்கான நிருவாகத் தத்துவப் பத்திரமானது கட்டாயமானதாதலாகாது; ஆனல், மரணமெய்தியவரின் அத்தகைய மரணச் சொத்துக்கு நிருவாகத் தத்துவப் பத்திரம் விரும்பப்படுகின்றவிடத்து, அவரது ஆதனம் தொடர்பான நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்கப்படுவதற்கான விண்ணப்பமொன்றுனது, விண்ணப்பகாரர் வதியும் மாவட்டத்திலுள்ள, அல்லது மரணமெய்தியவர் இறந்த நேரத்தில் வதிந்த அல்லது மரணமெய்தியவரின் மரணச்சொத்தைச் சேர்ந்த ஏதேனும் காணி அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்துக்குச் செய்யப்படலாம். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் சுருக்கமுறை நடவடிக்கையிலான மனுமூலம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அம்மனு 524 ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்டவாறுன, மரணசாதனம் எதுவும் இல்லை என்பதற்கான இயைபான நிகழ்வுகளையும், மரணமெய்தியவரின் இறப்பையும், மனுதாரரின் அறிவுக்கெட்டியவரை மரணமெய்தியவரின் வழியுரிமையாளர்களையும் பற்றி, இலக்கமிடப்பட்ட பந்திகளில் எடுத்துக்காட்டுதலும் வேண்டும் ; மனுதாரர் எத்தன்மையில் உரிமை கோருகின்றுர், என்பதையும் அவர் அவ்வாறு செய்வதனை நீதியானதாக்கும் நிகழ்வுகளையும் மனுவானது காட்டுதலும் வேண்டும். மனுவிலுள்ள முக்கிய சார்த்தல்களுக்கு முதற்றேற்றளவிலான என்பிப்பளிக்கும் போதிய சான்றின் மூலம் விண்ணப்பமானது

ஆதாரப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு மாணமெய்தியவரின் கிட்டிய உறவினரை எதிர்வாதிகளாகப் பெயர் குறித்திருத்தலும் வேண்டும்.

(2) (அ) மனுதாரர் தமது மனுவுடன் பின்வருவனவற்றைச் சேர்த்தனுப்புதல் வேண்டும்—

(i) பின்னுறுதிக் கட்டளையின் வரைவுப் பிரதி ;

(ii) பின்னுறுதிக் கட்டளைக்கும் அதனைச் சேர்ப்பிப்பதற்கும் தேவைப்படும் முத்திரைகள் ;

(iii) முதலாம் அட்டவணையிலுள்ள 84அ என்னும் இலக்கப்படிவத்திலான பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தலின் வரைவுப் பிரதி,

(ஆ) மனுதாரர் தம்முடைய விண்ணப்பத்துக்குச் சம்மதிக்கும் அத்தகைய எதிர்வாதிகளின் எழுத்திலான சம்மதத்தையும், மனுவோடு சேர்த்தனுப்பலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 531அ, 531ஆ என்னும் பிரிவுகளை நீக்கஞ் செய்தல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 531அ, 531ஆ என்னும் பிரிவுகள் இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 537 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 537 ஆம் பிரிவானது, இதனகத்து பின்னர் விதித்துரைக்கப்பட்டுள்ள "சுருக்கமுறை நடவடிக்கை விதிகளைப் பின்பற்றி", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சுருக்கமுறை நடவடிக்கை வகையிலான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 539அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 539அ என்னும் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"வழக்கு முடியும் வரையிலான திருவாகம்.

539அ. (1) இறந்த ஆளொருவரின் மரணசாதனம் செல்லுபடியானதா அல்லவா என்பதுபற்றிய, அல்லது மரணசாதன அதிகாரப் பத்திரம் பெறுவதற்கான அல்லது மரணச்சொத்து திருவாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்கான, அல்லது அதனைத் திரும்ப அழைப்பதற்கான, அல்லது ஒழிப்பதற்கான ஏதேனும் வழக்கு

நடவடிக்கை முடிவுறுதிருக்கின்றவிடத்து, நீதிமன்ற மானது, முறையற்ற தாமதம் என்பதைக் காரணமாக வைத்து அல்லது ஏதேனும் போதுமான காரணத்தை வைத்து—

(i) நிருவாகியொருவருக்கு அவ்வழக்கு நடவடிக் கைக் காலம் வரைக்குமென மட்டுப்படுத்தி இறந்த ஆளினது மரணச் சொத்திற்கான நிருவாகத் தத்துவப் பத்திரங்களை வழங்க லாம்; அத்துடன் அத்தகைய நிருவாகி நீதி மன்றத்தினது நேரடிக் கட்டுப்பாட்டுக்கு அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன், அத னது பணிப்பின்கீழ் செயலாற்றுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய நிருவாகி, மரணச் சொத்தைப் பங்கிட்டளிக்கும் உரி மையை உடையவராதலுமாகாது; அத்துடன்

(ii) மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்தி ரம் வழங்கப்படுவதற்கு முன்னர், இறந்த ஆளினது மரணச்சொத்திலுள்ள ஏதேனும் ஆதனத்தை விற்பனைசெய்வது அவசியமான தாக வருகின்றவிடத்து, நீதிமன்றமானது அத்தகைய ஆதனத்தை விற்கும் நோக்கத் துக்காக, மட்டுப்படுத்தப்பட்ட தத்துவப் பத் திரங்களை வழங்கலாம்.

(2) அந்த ஆதனம் அந்த வழங்குகையில் குறித் துரைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழங்குகையானது, பின்வரும் நிபந்தனைகளுக்கமை வாக நிருவாகத் தத்துவப் பத்திரங்கள் வழங்கப்பட் டுள்ளன என்பதை வெளிப்படையாகக் கூறுதலும் வேண்டும் :—

(அ) விற்பனையானது, தனிப்பட்ட ஒப்பந்தம் மூல மானதாயின், நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப் பட்ட விலையில் இருத்தல் வேண்டும்; அல்லது பகிரங்க ஏல விற்பனை மூலமானதாயின், முதற்கூறு விலையின்படி அல்லது வேறுவகை யாக இருத்தல் வேண்டும்;

(ஆ) விற்பனையால் வரும் தேறிய வரும்படிகள், நீதி மன்றம் விதித்துரைக்கக்கூடியவாறான அத் தகைய காலத்துக்குள் நீதிமன்றத்தில் வைப் பிலிடப்படுதல் வேண்டும்;

(இ) எந் நிருவாகிக்குத் தத்துவப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ அந் நிருவாகி, நீதி மன்றத்தினால் விற்பனையானது உறுதிப்படுத் துவதற்கு முன்னதாக, அசைவற்ற ஆதனத் தின் உரித்துமாற்ற உறுதி எதனையும் எழுதி நிறைவேற்றுவதற்குத் தத்துவமுடையவரா கார்; அத்துடன்

(ஈ) சூழ்நிலைகளுக்கேற்ப விதிப்பது பொருத்தமான தென நீதிமன்றம் கருதக்கூடிய வேறு ஏதேனும் பொருத்தனை.

(3) இப்பிரிவின்கீழ் தத்துவப் பத்திரங்களை வழங்குவதற்கான கட்டளையொன்றை ஆக்குமுன்னர், மரண சாதன அதிகாரப் பத்திரத்துக்கான அல்லது மரணச் சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரத்துக்கான மூல மனுவுக்கான எதிர்வாதிகளுக்கு அவ்விண்ணப்பம் பற்றி அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர்கள் அல்லது மரணச்சொத்தில் அக்கறையுள்ள வேறெவரேனும் ஆள், அத்தகைய விற்பனைக்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்திருந்தாலொழிய, அத்தகைய விற்பனைக்கு எதிராகக் கூறவிரும்புவதைக் கூற அனுமதிக்கப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 539ஆ என்னும் பிரிவை நீக்கஞ்செய்தல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 539ஆ என்னும் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 542, 543 ஆகிய பிரிவுகளை நீக்கஞ்செய்தல்.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 542, 543 ஆகிய பிரிவுகள் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 545 ஆம் பிரிவை நீக்கஞ்செய்தல்.

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 545 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 546 ஆம் பிரிவைத் திருத்துதல்.

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 546 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "ஆகக் கிட்டியவுறவினர்" அல்லது வேறு ஆள் எவரும் அவருடைய உள்ளூர் நியாயாதிக்க எல்லைகளுக்குள் வதியவில்லை எனக் காண்பிக்கப்பட்டதன் மேலும், என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆகக் கிட்டிய உறவினர் அல்லது வேறு ஆள் எவரும் இல்லையெனக் காண்பிக்கப்பட்டதன் மேலும்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) "அதனை நிருவகிப்பதற்குச் சட்டமுறையாக உரித்துடைய நிறைவேற்றுநர் ஒருவரினால் அல்லது நிருவாகி ஒருவரினால் அந்த ஆதனம் உரிமை கோரப்படும் வரைக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதனை நிருவகிப்பதற்குச் சட்டமுறையாக உரித்துடைய நிறைவேற்றுநர் ஒருவரினால் அல்லது நிருவாகி ஒருவரினால் அல்லது மரபுரிமையாளர் ஒருவரினால் அந்த ஆதனம் உரிமை கோரப்படும்வரைக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 547 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 547 ஆம் பிரிவை நீக்கஞ்செய்தல்.

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 553 ஆம் பிரிவானது, அதிற் காணப்படும் "பணம் எதனையும் நீதிமன்றத்திற்குச் செலுத்தலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 553 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"பணம் எதனையும் நீதிமன்றத்திற்குச் செலுத்தலாம் :

ஆயின், கட்சிக்காரர்கள் சம்மதிக்கின்றவிடத்து, அத்தகைய கணக்குகளைச் சமர்ப்பிப்பதன்மீது, வேறுவகையாகக் கொடுபடற்பாலதான முத்திரை தீர்வையைக் கொடுப்பதன்மீது, அத்தகைய கணக்கைச் சமர்ப்பித்தலும், கொடுப்பனவைச் செய்தலும் தேவையில்லையென விட்டுவிடப்படுதல் வேண்டுமென்பதுடன் வழக்கு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்.".

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 554அ என்னும் பிரிவானது, "மரணசாதனம் எழுதாது, பெறுமதியில் இருபதினாயிரம் ரூபாவுக்குக் குறைவாகவுள்ள மரணச்சொத்தைவிட்டு ஆள் எவரும் இறக்கும்போது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மரணசாதனம் எழுதாது ஆள் எவரும் இறக்கும்போது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 554அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 554அஅ என்னும் பிரிவானது, "1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 554 அஅ என்னும் பிரிவைத் திருத்துதல்.

41. முதன்மைச் சட்டவாக்கத்தின் 582 ஆம் பிரிவானது, அப்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது : முதன்மைச் சட்டவாக்கத்தின் 582 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஆயின், நியாயாதிக்கம் உள்ள எந் நீதிமன்றமும், பராயமடையாத ஒருவரினது உறவினர் எவராவது, அத்தகைய உறவினருக்கு காப்பாண்மைச் சான்றிதழொன்று வழங்கப்படாதிருப்பினும் அந்தப் பராயமடையாதவரின் சார்பில் வழக்கொன்றைத் தொடருவதற்கு அல்லது எதிர்த்து வாதிடுவதற்கு அவருக்கு அனுமதி அளிக்கலாம்.".

42. முதன்மைச் சட்டவாக்கத்தின் 584 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 584 ஆம் பிரிவை நீக்கஞ்செய்தல்

முதன்மைச் சட்டவாக்கத்தின் 655, 656 ஆம் பிரிவுகளை நீக்கஞ்செய்தல்.

43. முதன்மைச் சட்டவாக்கத்தின் 655 ஆம், 656 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 663 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

44. முதன்மைச் சட்டவாக்கத்தின் 663 பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

"தடைக் கட்டளைக்கு அல்லது தடைசெய் கட்டளைக்குக் கீழ்ப்படியாமை தண்டிக்கப்படும் விதம்.

663. அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தின் மீது நீதி மன்றத்தினால் வழங்கப்படும் தடைக் கட்டளைக்கு அல்லது தடைசெய் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தொழுகப் படாத சந்தர்ப்பத்தில் தவறுளரை நீதிமன்ற அவமதிப்புத் தவறொன்றுக்குத் தண்டித்தாற்போன்று தண்டிப்பதன் மூலம் அக்கட்டளை வலுவுக்கிடப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 664 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

45. முதன்மைச் சட்டவாக்கத்தின் 664 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"எதிர்க்கட்சிக்காரருக்கு அறிவித்தல் கொடுத்ததன் மேல் தடைக் கட்டளைக்கான விண்ணப்பம் செய்யப்படுதல்.

664. (1) நீதிமன்றமானது தடைக்கட்டளை ஒன்றை வழங்குவதற்கு முன்னதாக சத்தியக் கடுதாசியோடு சேர்த்து அதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்ப மனுவை எதிர்க்கட்சிக்காரருக்குச் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(2) தடைக்கட்டளையொன்றை வழங்குவதன் நோக்கம் தாமதிப்பது காரணமாகத் தோல்வியடையும் என நீதிமன்றத்திற்கு தோன்றுகின்ற விடத்து தடைக் கட்டளைக்கான விண்ணப்பத்தை விசாரித்து முடிவுசெய்யும் வரை முதற்றடவையில் பதினான்கு நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு எதிராளியை நீதிமன்றமானது தடை செய்யலாம். நீதிமன்றமானது விதிவிலக்கான சூழ்நிலைகளிலும் பதியப்படவேண்டிய காரணங்களுக்காகவும், அவ்வாறு வழங்கப்பட்ட தடைசெய் கட்டளையின் செயற்பாட்டை ஒரு தடவையில் பதினான்கு நாட்கள் கொண்ட காலப் பகுதியொன்றுக்கு நீடிக்கலாம். இந்த ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட தடை செய் கட்டளையானது, தடைக் கட்டளையொன்றை வழங்குவதற்கான விண்ணப்பத்தை விசாரித்து முடிவு செய்ததன் மேல் காலங்கழிந்துவிடுதல் வேண்டும்.

(3) நீதிமன்றம், அதன் சொந்தப் பிரேரணை மீது அல்லது கட்சிக்காரர் எவரினாலேனும் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது, (2) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தடை செய் கட்டளையொன்று முக்கிய நிகழ்வுகள் எவற்றையும் மறைத்தமையினால் அல்லது தவறாக எடுத்துரைத்ததனால் பெறப்பட்டது என்பது பற்றி நீதிமன்றம் திருப்திப்படுமானால், அத்தகைய கட்டளையின் செயற்பாட்டை இடைநிறுத்திவைக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 665 ஆம் பிரிவைத் திருத்துதல்.

46. முதன்மைச் சட்டவாக்கத்தின் 665 ஆம் பிரிவானது, "நெறிப்படுத்தப்படும் தடைக்கட்டளையானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நெறிப்படுத்தப்படும் தடைக்கட்டளை அல்லது தடைசெய் கட்டளையானது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 666 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

47. முதன்மைச் சட்டவாக்கத்தின் 666 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"கட்டளையானது எவ்விதம் தள்ளுபடி செய்தல் அல்லது மாற்றப்படுதல் என்பது.

666. இந்த அத்தியாயத்தின்கீழ் தடைக் கட்டளையொன்றுக்காக அல்லது தடைசெய் கட்டளையொன்றுக்காக ஆக்கப்படும் கட்டளையொன்றானது, அத்தகைய கட்டளை பற்றித் திருப்தியுறாத கட்சிக்காரர் எவரும் நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின் மேல், அந்நீதிமன்றத்தினால் தள்ளப்படலாம் அல்லது மாற்றப்படலாம் அல்லது தள்ளுபடி செய்யப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 667 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

48. முதன்மைச் சட்டவாக்கத்தின் 667 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"நீதிமன்றம் எப்பொழுது நட்டஈடு வழங்கலாமென்பது.

667. போதுமானவையல்லாத ஏதுக்களின் மேல் தடைக் கட்டளைக்கு அல்லது தடைசெய்கட்டளைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கின்றதென நீதிமன்றத்துக்குத் தோன்றினால், அல்லது நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட தடைக்கட்டளை அல்லது தடைசெய் கட்டளை வழங்கப்பட்ட பின்னர் வழக்கு நடவடிக்கையானது தள்ளுபடி செய்யப்பட்டிருந்து அல்லது தவணை தவறியதன் காரணமாக அல்லது வேறுவகையாக விண்ணப்பகாரருக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்து அத்துடன் தடைக் கட்டளைக்கு அல்லது தடைசெய் கட்டளைக்கு விண்ணப்பிப்பதற்கு எவ்வித சாத்தியமான ஏது எதுவும் இருக்கவில்லையென நீதிமன்றத்துக்குத் தோன்றினால், எக்கட்சிக்காரருக்கு எதிராகத் தடைக் கட்டளை அல்லது தடைசெய் கட்டளை வழங்கப்பட்டதோ, அக்கட்சிக்காரர் விண்ணப்பம் செய்ததன் மேல், நீதிமன்றமானது, அதன் தீர்வையில், தடைக் கட்டளை அல்லது தடைசெய் கட்டளை வழங்கப்பட்டதனால் அத்தகைய கட்சிக்காரருக்கு ஏற்பட்ட செலவுகளுக்கு அல்லது நேர்ந்த ஊறுகளுக்கு, நியாயமான நட்டஈடென அது கருதும் அத்தகைய பணத் தொகையை, தடைக் கட்டளை அல்லது தடைசெய் கட்டளையைப் பெறும் கட்சிக்காரருக்கு எதிராக அளிக்கலாம். இப்பிரிவின் கீழான அளிப்பொன்றானது, தடைக் கட்டளை அல்லது தடைசெய் கட்டளை வழங்கல் தொடர்பில் நட்டஈடு பெறுவதற்காக கொண்டு வரப்படும் வழக்கு நடவடிக்கை எதையும் தடைசெய்தல் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 753 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

49. முதன்மைச் சட்டவாக்கத்தின் 753 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"மீளாய்வு செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு உள்ள தத்துவங்கள்.

753. ஏற்கனவே விளங்கப்பட்டு விட்டதாயினுஞ்சரி அல்லதுவிசாரணை முடிவுறுதிருக்கும் நிலையில் உள்ளதாயினும் சரி, எந்நீதிமன்றத்திலும், நியாயசபையிலும் அல்லது வேறு நிறுவனம் எதிலுமான வழக்கு எதிலும் வழங்கப்பட்ட ஏதும் தீர்ப்பினது அல்லது கட்டளையினது சட்டமுறைமை பற்றி அல்லது தகவு பற்றி அல்லது அத்தகைய நீதிமன்றத்தின் நியாயசபையின் அல்லது வேறு நிறுவனத்தின் வழக்கு நடவடிக்கைகளினது ஒழுங்கு முறைமை பற்றித் தன்னைத் திருப்திப் படுத்தும் நோக்கத்துக்காக, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, தனது சொந்தப் பிரேரணையின்மீது அல்லது ஏதேனும் விண்ணப்பத்தின் மீது வழக்கு எதனினதும் பதிவேட்டை வரவழைத்துப் பெற்று பரிசீலனை செய்யலாம், அத்துடன் அவ்வாறு அதன் முன்பாகக் கொணரப்பட்ட வழக்கினது மீளாய்வின்மேல்; நீதியின் அக்கறைகள் தேவைப்படுத்துகின்றவாறு, அவ்வழக்கில் தீர்ப்பு எதுவும் வழங்கலாம் அல்லது கட்டளை எதுவும் ஆக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 754 முதல் 760அ வரையிலான பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

50. முதன்மைச் சட்டவாக்கத்தின் 754 தொடக்கம் 760 அ வரையிலான பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

"மேன்முறையீடு செய்யும் விதம்.

754. (1) தாம் சாட்சிக்காரராகவுள்ள ஏதேனும் குடியியல் வழக்கில், வழக்கு நடவடிக்கையில் அல்லது கருமத்தில் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தினால் எடுத்து மொழியப்பட்ட ஏதேனும், தீர்ப்பு பற்றி, அதிருப்தியடையும், எவரேனும் ஆள், நிகழ்வு பற்றிய அல்லது சட்டம் பற்றிய பிழை தொடர்பில் அத்தகைய தீர்ப்புக்கு, எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்கலாம்.

(2) தாம் கட்சிக்காரராகவுள்ள அல்லது கட்சிக்காரராகவிருக்க விரும்பும் ஏதேனும் குடியியல் வழக்கின்போது, வழக்கு நடவடிக்கையின்போது அல்லது கருமத்தின்போது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட, தீர்ப்பொன்றாக இராது, ஏதேனும் குடியியல் வழக்கிலான, நடவடிக்கையிலான, அல்லது கருமத்திலான ஏதேனும் முடிவின் இறுதியான கூற்றாகவிருக்கும், ஏதேனும் கட்டளை தொடர்பில் அதிருப்தியடையும் எவரேனும் ஆள் முதலில் கேட்டுப் பெறப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அனுமதியுடன், நிகழ்வு பற்றிய அல்லது சட்டம் பற்றிய ஏதேனும் பிழைதிருத்தப்படுவதற்காக அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்கலாம்.

(3) ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் தீர்ப்பு, அல்லது தீர்வை எதற்கெதிராகவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடு ஒவ்வொன்றும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படும் அத்தகைய காலத்தினுள்ளும் அம் மாதிரியிலும் அம் முறையிலும் முதனிலை நீதிமன்றத்துக்கு மேன்முறையீட்டறிவித்தலைக் கொடுப்பதன் மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டறிவித்தலானது எத்தீர்ப்புக்கு, எதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அத்தீர்ப்பு, எடுத்து மொழியப்பட்ட தேதியிலிருந்து பதினன்கு நாட்களுக்குள் (அத்தேதியைக் கொண்ட நாளும் மனு சமர்ப்பிக்கப்படும் நாளும் ஞாயிற்றுக் கிழமைகளும் பொது விடுமுறை நாட்களும் நீங்கலாக) மேன்முறையீடு செய்யும் கட்சிக்காரரால் அல்லது அவரது பதிவுபெற்ற தரணியால் அந்நோக்கத்துக்கென முதனிலை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வறிவித்தல் எந் நீதிமன்றத்துக்கு அவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்றதோ அந் நீதிமன்றம் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறு அதனை ஏற்றுக்கொள்ளுதலும் கையாளுதலும் வேண்டும். முற்போந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிடின் அந்நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தல் வேண்டும்.

(5) கட்டளைச் சட்டத்தில் முரணுகை எது எவ்வாறிருப்பினும், இவ்வத்தியாயத்தின் நோக்கத்திற்காக—

"தீர்ப்பு" என்பது இறுதித் தீர்ப்பின் பயனைக் கொண்டதான ஏதேனும் குடியியல் நீதிமன்றத்தினல் ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பு அல்லது கட்டளை என்று பொருளாகும் ; அத்துடன்

"கட்டளை" என்பது ஒரு தீர்ப்பு அல்லாததான ஏதேனும் குடியியல் வழக்கு நடவடிக்கையிலான ஏதேனும் முடிபின் இறுதிக் கூற்று என்று பொருளாகும்.

மேன்முறையீடு பற்றிய அறிவித்தல்.

755. (1) ஒவ்வொரு மேன்முறையீட்டறிவித்தலும் நல்ல, பொருத்தமான தாளில் தெளிவாக எழுதப்படுதல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டாளரால் அல்லது அவரது பதிவு பெற்ற தரணியினல் கையொப்பமிடப்பட்டு உரிய முறையில் முத்திரையிடப்பட்டிருத்தலும் வேண்டும். அத்தகைய அறிவித்தல் பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மேன்முறையீடு எந்நீதிமன்றத்திலிருந்து செய்யப்படுகின்றதோ அந் நீதிமன்றத்தின் பெயர் ,

(ஆ) வழக்கிலக்கம் ;

(இ) வழக்கிற்கான கட்சிக்காரர்களின் பெயர்களும் முகவரிகளும் ;

(ஈ) மேன்முறையீட்டாளரினதும் எதிர்வாதியினதும் பெயர்கள் ;

(உ) கோரப்பட்ட நிவாரணத்தின் தன்மை :

ஆயின், மேன்முறையீடு சட்டத்துறைத் தலைமையதிபதியினாற் சமர்ப்பிக்கப்படுமிடத்து அத்தகைய முத்திரைகள் எவையும் அவசியமாதலாகாது.

(2) மேன்முறையீட்டறிவித்தல் பின்வருவனவற்றுடன் இணைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) இதனகத்து ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட விதிகளில் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தொகையிலும் தன்மையிலும் எதிர்வாதியின் மேன்முறையீட்டுச் செலவுக்கான பிணைப்பொறுப்பு அல்லது எதிர்வாதியினால் அல்லது அவரது பதிவு பெற்ற தரணியினால் கையொப்பமிடப்பட்ட பிணைப் பொறுப்புக்கான ஓம்பாடு அல்லது பிணைப்பொறுப்பு அவசியமில்லை எனபதற்கான உரிமை விலக்கற் பத்திரம், அத்துடன்

(ஆ) அந்த எதிர்வாதியிடம் அல்லது அவரது பதிவு பெற்ற தரணியிடம் மேன்முறையீட்டறிவித்தலின் பிரதியொன்று சேர்ப்பித்தமைக்கான எண்பிப்பு, (இது அத்தகைய அறிவித்தலைப் பெற்றமை பற்றிய எழுத்திலான ஓம்பாட்டு வடிவத்தில் அல்லது அத்தகைய சேர்ப்பித்தலுக்கு நிருபணமாக பதிவு செய்யப்பட்ட அஞ்சல் பற்றுச் சீட்டாக இருத்தல் வேண்டும்.)

(3) எந்தத் தீர்ப்புக்கு அல்லது தீர்வைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ, அந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், ஒவ்வொரு மேன்முறையீட்டாளரும் அவ்வாறு மேன்முறையீடு செய்யப்படுவதற்கான சூழ்நிலைகளையும், மேன்முறையீடு செய்யப்படும் தீர்ப்புக்கு அல்லது தீர்வைக்கு எதிரான ஆட்சேபனை எதுக்களையும் எடுத்துக் காட்டுவதும், 758 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்

பட்ட. விபரங்களைக் கொண்டிருப்பதுமான மேன்முறை யீட்டு மனு ஒன்றை முதனிலை நீதிமன்றத்திடம் முன்னி லைப்படுத்தல் வேண்டும். அத்தகைய மேன்முறையீட்டு மனுவானது மேன்முறையீட்டாளரால் அல்லது அவரது பதிவுபெற்ற தரணியினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும். அத்தகைய மேன்முறையீட்டு மனுவானது முத்திரை வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண் டும் :

ஆயின், அத்தகைய மனுவானது, எத் தீர்ப்புக்கு, அல்லது தீர்வைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப் படுகின்றதோ, அத்தீர்ப்பு, வழங்கப்பட்ட தேதியிலி ருந்து அறுபது நாட்களுக்குள் முதனிலை நீதிமன்றத் துக்கு முன்னிலைப்படுத்தப்படாவிட்டால், மேன்முறை யீட்டைப் பெற்றுக்கொள்ள நீதிமன்றமானது மறுத்தல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டு மனுவானது கோப்பிடப்பட்ட தன் மேல், நீதிமன்றமானது அந்த மேன்முறையீட்டு மனுவை, மேன்முறையீடு செய்யப்படும் தீர்ப்புக்கு, அல் லது தீர்வைக்கு இயைபான வழக்கின் எல்லாப் பத்திரங் களுடனும் நடவடிக்கைகளுடனும், சேர்த்து இயன்ற ளவு விரைவாக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்புதல் வேண்டும் ; எனினும், அவசியமேற்படின் நிறைவேற்றும் நோக்கங்களுக்காக, மேன்முறையீடு செய்யப்படும் தீர்ப்பின், அல்லது தீர்வையின் பிரதி ஒன்றை அந்த நீதிமன்றம் தன் வசம் வைத்திருந்து வருதல் வேண்டும். அந்த வழக்கானது எத் தேதியில் தொடுக்கப்பட்டது, எத் தேதியில் முடிவு செய்யப்பட் டது, யாருக்கு சாதகமாக முடிவு செய்யப்பட்டது, மேன்முறையீட்டுக்கான அறிவித்தல், மேன்முறையீட்டு மனு ஆகியன எந்தத் தேதியில் கோப்பிடப்பட்டன, அத்துடன் எத் தீர்ப்புக்கு, எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டிருக்கிறதோ அத் தீர்ப்புக்கு, அல்லது தீர் வைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு உரிமை இருக்கிறதோ அல்லவா என்பது பற்றி நீதிபதியினது அபிப்பிராயம் என்பனவற்றைக் கூறுகின்ற நீதிமன்றப் பதிவாளரினது அத்தாட்சிப் பத்திரம் அத்தகைய நட வடிக்கைப் பதிவேடுகளுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டு மனுவைப் பெற்றுக்கொண்ட தன் மேல், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் உட னடியாக அந்த மனுவுக்கு ஓர் இலக்கமிட்டு, அத்தகைய இலக்கத்தை மேன்முறையீட்டு ஏடாப்பில் பதிந்து சம் பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு அதனைப்பற்றி பதி வஞ்சல் மூலம் அறிவித்தல் வேண்டும் :

ஆயின், எத் தீர்ப்புக்கு, அல்லது தீர்வைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ அத் தீர்ப்புக்கு, எதிராக மேன்முறையீடு செய்வதற்கு உரிமையில்லை யென முதனிலை நீதிமன்றத்தின் நீதிபதி அபிப்பிராய மொன்றைத் தெரிவித்துள்ளபோது, பதிவாளர் அம் மேன்முறையீட்டு மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவருக்கு அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் வேறு எவரேனும் நீதிபதிக்கு அனுப்பி வைக்கவேண்டும்; அத்துடன் அத்தகைய நீதிபதியினால் நிர்ணயிக்கப்பட வேண்டிய நாளன்று திறந்த நீதிமன்றத்தில் மனுதாரரினால் அல்லது அவரது சார்பில் அற்றோணியினால் மனு ஆதாரப்படுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்துதல் வேண்டும். நீதிமன்றமானது மனுதாரரை அல்லது அவரது அற்றோணியை விசாரித்த பின்னர் அத்தகைய மனுவை நிராகரிக்கலாம் அல்லது மனுவை விசாரிப்பதற்கான நாள் ஒன்றை நிர்ணயிக்கலாம்; அத்துடன் எதிர்வாதி மீது அல்லது எதிர்வாதிகள் மீது அதன்மேல் அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம் :

ஆயின், மேலும் இப்பிரிவின் கீழ் மனுவொன்று நிராகரிக்கப்படுமிடத்து, நீதிமன்றமானது அவ்வாறு நிராகரித்தமைக்கான காரணங்களைப் பதிதல் வேண்டும்.

பிணைப்பொறுப்பானது பண முறிமூலமும் பிணைகாரருடனும் இருத்தல் வேண்டுமென்பது.

756. (1) மேன்முறையீட்டுக் கட்சிக்காரர் ஒருவரிடமிருந்து தேவைப்படுத்தப்படவேண்டிய பிணைப் பொறுப்பானது, நல்லவர்களும் போதியவர்களுமான ஒரு அல்லது அதிலும் மேற்பட்ட பிணையாளருடன் அல்லது பிணைகாரர்களுடன் கூடிய, பிணைமுறி மூலமாக (படிவம் இல. 129, முதலாம் அட்டவணை) இருத்தல் வேண்டும், அல்லது அசைவற்ற ஆதனத்தை ஈடுவைப்பதன் மூலமாக அல்லது அந்த மேன்முறையீட்டின் செலவுகளைச் சமாளிப்பதற்குப் போதிய ஒரு தொகையையேயன்றி அதிலுங் கூடுதலாகவிராத ஒரு தொகையை வைப்பிலிட்டு முறி மூலம் அடைமானம் வைத்தல் மூலமாக இருத்தல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டாளர்—

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதியாக இருப்பின்;

(ஆ) திருமண வழக்கொன்றில் வழக்கிடைப் பிரிமனைப் பணம் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையைப் பெற்றுள்ள ஒரு வாழ்க்கைத் துணையாக இருப்பின்;

(இ) கடனிறுவகையறவு வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில், கடனிறுக்க வகையற்றவராக இருப்பின் ;

(ஈ) பிணைப்பொறுப்புக் கட்டுவதினின்றும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தால் விலக்களிக்கப்பட்டவராக இருப்பின்,

பிணைப்பொறுப்பு அவசியமாகாது.

மேன்முறையீடு செய்வதற்கான அனுமதி கோரும் விண்ணப்பம் தொடர்பிலான நடவடிக்கைமுறை.

757. (1) ஏதேனும் குடியியல் வழக்கின்போது, வழக்கு நடவடிக்கையின் போது அல்லது கருமத்தின் போது நீதிமன்றத்தினல் செய்யப்பட்ட கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான அனுமதியைப் பெறுவதற்காய விண்ணப்பம் ஒவ்வொன்றும், முறைப்படி முத்திரையிடப்பட்டதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு முகவரியிடப்பட்டதும், இடருற்ற கட்சிக்காரராலோ அல்லது அவரது பதிவு பெற்ற தாணியாலோ கையொப்பமிடப்பட்டதுமான மனுவுருவமானதாக இருத்தல் வேண்டும், என்பதோடு, அத்தகைய மனு சத்தியக்கடுதாசியினல் ஆதாரமளிக்கப்படுதலும் 758 ஆம் பிரிவினல் தேவைப்படுத்தப்பட்ட விபரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிக்கான விண்ணப்பமானது, எக் கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ, அக் கட்டளைத் தேதியும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியும், ஞாயிற்றுக்கிழமையும், பொது விடுமுறை நாட்களும் நீங்கலாக, அக் கட்டளை எடுத்து மொழியப்பட்ட தேதியிலிருந்து பதினன்கு நாட்களுக்குள்ளாக மேன்முறையீடு செய்யும் கட்சிக்காரரினல் அல்லது அவரது பதிவு பெற்ற தாணியால், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றமானது, இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாருக அதனை ஏற்றுக் கையாளுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிடின், மேன்முறையீட்டு நீதிமன்றமானது அதை நிராகரித்தல் வேண்டும். மேன்முறையீட்டாளர் அத்தகைய மனுவுடன் எதிர்வாதிகளிடம் சேர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படக்கூடியவாருன அத்தகைய எண்ணிக்கையினவான பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிக்கான விண்ணப்பத்தைக் கோப்பிட்டதன் மேல், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் அந்த விண்ணப்பத்துக்கு இலக்கமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விண்

ணப்பம் கோப்பிடப்பட்ட மூன்று நாட்களுக்குள், அத்தகைய விண்ணப்பத்தை ஒரு நீதிபதியிடம் அவரது தனி அறையில் அவர் இருக்கும்போது, சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிக்கான விண்ணப்பம் எந்த நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதோ, அந்த நீதிபதி—

(அ) விண்ணப்பம் பற்றி விசாரிப்பதற்கான தேதியொன்றை உடனடியாக நிர்ணயிக்கலாம், அத்துடன் எதிர்வாதிக்கு அல்லது எதிர்வாதிகளுக்கு அதுபற்றி அறிவித்தல் வழங்கும்படி கட்டளையிடலாம்; அல்லது

(ஆ) அந்த விண்ணப்பத்தை, அத்தகைய நீதிபதியினால் நிர்ணயிக்கப்படவேண்டிய ஒரு நாளன்று மனுதாரர் அல்லது அவரது சார்பிலான ஒரு சட்டத்தரணி பகிரங்க நீதிமன்றத்தில் ஆதாரப்படுத்த வேண்டுமென்று தேவைப்படுத்தலாம்; அத்துடன், அந் நீதிமன்றம் அத்தகைய மனுதார் அல்லது அவரது சட்டத்தரணி கூறுவதைச் செவிமடுத்த பின்னர் அத்தகைய விண்ணப்பத்தை நிராகரிக்கலாம் அல்லது அத்தகைய விண்ணப்பம் பற்றி விசாரிப்பதற்கான நாளொன்றினை நிர்ணயிக்கலாம், அத்துடன் அதுபற்றிய அறிவித்தலை எதிர்வாதிக்கு அல்லது எதிர்வாதிகளுக்கு வழங்கும்படி கட்டளையிடலாம் :

ஆயின், ஒரு விண்ணப்பமானது இந்த உட்பிரிவின் கீழ் நிராகரிக்கப்படுகின்ற போதெல்லாம் அத்தகைய நிராகரிப்புக்கான காரணங்களை நீதிமன்றம் பதிதல் வேண்டும்.

(4) அறிவித்தல் வழங்கப்படும்படி கட்டளையிடப்பட்டுள்ளவிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர், அதற்கிணங்க, ஒவ்வோர் எதிர்வாதிக்கும் அல்லது பதிவுபெற்ற தரணிக்கும் பதிவுத் தபால் மூலம் அறிவித்தல் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு வழங்கப்படும் அறிவித்தலுடன் சேர்த்து, மேன்முறையீட்டாளரினால் கொடுத்துதவப்பட்ட மேன்முறையீட்டு மனுவின் பிரதியொன்றை இணைத்தலும் வேண்டும். அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது நீதிமன்றம் அப்பொழுது நிர்ணயிக்கக்கூடிய

வாறான அத்தகைய வேறு தேதியன்று, நீதிமன்றம் மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிக்கான விண்ணப்பத்தை விசாரித்தல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீடு செய்வதற்கான அனுமதியை அது வழங்குதல் வேண்டும் அல்லது வழங்க மறுத்தல் வேண்டும்.

(5) மேன்முறையீடு செய்வதற்கான அனுமதி வழங்கப் பட்டதன் மேல் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர், அது பற்றி உடனடியாக முதனிலை நீதிமன்றத்துக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், மேன் முறையீட்டு நீதிமன்றம் வேறு விதமாகப் பணித்தாலன்றி, முதனிலை நீதிமன்றத்திலுள்ள அது தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் எல்லாம் நிறுத்திவைக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் சொல்லப்பட்ட நீதிமன்றமானது, பிரச்சினையிலுள்ள கருமத்துக்கு இயைபான அவ்வழக்கின் எல்லாப் பத்திரங்களையும் நடவடிக்கைப் பதிவேடுகளையும் இயன்றளவு விரைவாக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

மேன்முறையீட்டின் மொழியும் படிவமும்.

758. (1) மேன்முறையீட்டு மனுவானது, நல்லதும் பொருத்தமானதுமான கடுதாசியில் தெளிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அது பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்:—

(அ) அந்த வழக்கு எந்த நீதிமன்றத்தின் முடிவுருதிருக்கின்றதோ அந்த நீதிமன்றத்தின் பெயர்;

(ஆ) அந்த வழக்குக்கான கட்சிக்காரர்களின் பெயர்கள்;

(இ) மேன்முறையீட்டாளரின் பெயரும் எதிர்வாதியின் பெயரும்;

(ஈ) மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்ப உரை;

(உ) எத் தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ, அந்தத் தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான ஏதுக்கள் பற்றிய தெளிவானதும் திட்பமானதுமான கூற்றொன்று—அத்தகைய கூற்றானது முறையாக இலக்கமிடப்பட்ட பந்திகளில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஊ) கோரப்படும் நிவாரணம் பற்றிய கோரிக்கை.

மேன்முறையீடை முடிவு செய்வதில், நீதிமன்றமானது மேன்முறையீட்டாளர் காட்டிய ஏதுக்களுக்கு மாத்திரமே கவனம் செலுத்தவேண்டும் என்ற வரையறை இல்லை.

(2) நீதிமன்றமானது, ஏதேனும் மேன்முறையீட்டை முடிவு செய்வதில், மேன்முறையீட்டாளரால் எடுத்துக் காட்டப்பட்ட ஏதுக்களுக்கு மாத்திரம் அதன் கவனத்தை மட்டுப்படுத்தலாகாது; ஆனல், எதிர்வாதி அந்த ஏது சம்பந்தமாக விசாரிக்கப்படுவதற்குப் போதுமானளவு அவகாசம் அளிக்கப்பட்டிருந்தாலொழிய, அந்த மேன்முறையீட்டாளரினல் எடுத்துக் காட்டப்படாத எவ்வேதுவின் மீதும், நீதிமன்றமானது தனது முடிவைச் செய்யலாகாது.

மனுவானது நிராகரிக்கப் படவேண்டிய விடத்து.

759. (1) முற்போந்த பிரிவில் விதித்துரைக்கப்பட்டுள்ள முறையில் மேன்முறையீட்டு மனு வரையப்படவில்லையாயின், அது நிராகரிக்கப்படலாம் அல்லது நீதிமன்றத்தினல் நிர்ணயிக்கப்படக்கூடியவாருள காலமொன்றுக்குள்ளாக திருத்தஞ் செய்யப்படுவதற்காக அது மேன்முறையீட்டாளருக்குத் திருப்பியனுப்பப் படலாம், அல்லது அப்பொழுதும், அவ்விடத்திலுமே திருத்தஞ் செய்யப்படலாம். மேன்முறையீட்டு மனுவெதனையும் நீதிமன்றமானது இப்பிரிவின்கீழ் நிராகரிக்கும்போது அவ்விதம் நிராகரிப்பதற்கான காரணங்களை அது பதிதல் வேண்டும். இப்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு மனுவெதுவும் திருத்தஞ் செய்யப்படுகின்ற போது, அந்த நீதிபதி அல்லது அதற்கென அவரினல் நியமிக்கப்படும் அத்தகைய அலுவலர், அந்தத் திருத்தத்தைத் தமது கையொப்பம் மூலம் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

(2) (ஏதேனும் செயல் அல்லது விடயம் எக் காலப் பகுதிக்குள்ளாகச் செய்யப்படவேண்டுமோ, அக்காலப் பகுதியைக் குறித்துரைக்கின்ற ஏற்பாடொன்று தவிர்ந்த) முற்போந்த பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில், எவரேனும் மேன்முறையீட்டாளர்பால் ஏதேனும் பிழை, தவிர்வு அல்லது குறைபாடு இருக்கின்ற விடயத்தில், எதிர்வாதி கணிசமான அளவில் பாதிக்கப்படவில்லை என மேன்முறையீட்டு நீதிமன்றமானது அபிப்பிராயப்படுமாயின், அது, நீதியானதெனக் கருதக்கூடிய அத்தகைய முறையில் நிவாரணம் வழங்கலாம்.

வழக்காளிகளுள் அல்லது எதிராளிகளுள் ஒருவர் முழுத் தீர்வைக்கும் எதிராக எப்போது மேன்முறையீடு செய்யலாம் என்பது.

760. ஒரு வழக்கில் ஒருவருக்கு மேற்பட்ட வழக்குக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அத்தீர்வையானது, எல்லா வழக்காளிகளுக்கும் அல்லது எல்லா எதிராளிக்கும் பொதுவாகவுள்ள எந்த ஏதுவையாவது அடிப்படையாகக் கொண்டதாகவுமிருக்கின்றவிடத்து, அந்த வழக்காளிகளுள் அல்லது எதிராளிகளுள் எவராயினும் ஒருவர், அந்த முழுத் தீர்வைக்குமெதிராக மேன்முறையீடு செய்யலாம், அத்துடன் அதன்மேல், மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்தத் தீர்வையை விடயத்துக்கேற்றவாறு எல்லா வழக்காளிகளுக்கும் சாதகமாக அல்லது எல்லா எதிராளிகளுக்கும் சாதகமாக நேர்மாறுக்கலாம் அல்லது திரிபுபடுத்தலாம்.

மேன்முறையீட்டுக்கான கட்சிக்காரரின் இறப்பு அல்லது அந்தஸ்து மாற்றம்.

760 அ. ஏதேனும் குடியியல் வழக்கு, நடவடிக்கை அல்லது கருமத்திலான ஒரு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், மேன்முறையீட்டுக் கட்சிக்காரராக உள்ள ஒருவர் இறந்து விடுதல் காரணமாக, அல்லது அவரது அந்தஸ்து நிலையில் ஏற்படும் மாற்றம் காரணமாக, வழக்குப் பதிவேடானது குறைபாடுடையதாகின்றவிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அவ்வாறு இறந்துவிட்ட அல்லது அந்தஸ்து நிலை மாறியுள்ள கட்சிக்காரரின் இடத்தில் அல்லது அவருடன் சேர்த்து மேலதிகமாகப் பதிவீடு செய்யப்பட வேண்டிய அல்லது வழக்குப் பதிவேட்டில் சேர்க்கப்படவேண்டிய முறையான ஆள், நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படியார் என்பதை அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் உயர் நீதிமன்றத்தினுல் ஆக்கப்பட்ட விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாருக, தீர்மானிக்கலாம் என்பதோடு, அதன் பின்னர், அத்தகைய ஆளின் பெயர், மேற்சொல்லியவாறு பதிவீடு செய்யப்பட்டதாக அல்லது வழக்குப் பதிவேட்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 765 ஆம் பிரிவைத் திருத்துதல்.

51. முதன்மைச் சட்டவாக்கத்தின் 765 ஆம் பிரிவானது, "எழுநூற்றைம்பத்துநாலாம் பிரிவினதும் 756 ஆம் பிரிவினது" எனும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "எழுநூற்றைம்பத்துநாலம் பிரிவினதும் 755 ஆம் பிரிவினதும் 759 ஆம் பிரிவினதும்" எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய அத்தியாயத்தை உட்புகுத்தல்.

52. முதன்மைச் சட்டவாக்கத்தின் 800 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயங்கள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அவை அதன் LXVI, LXVIஅ ஆம் அத்தியாயங்களாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"சிறு கோரிக்கை நீதிமன்றங்களுக்கான சிறப்பு வழக்கு நடவடிக்கைமுறை

பாகம் IXஅ

அத்தியாயம் (LXVI)

பொதுவானவை

சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கான ஏற்பாடுகள்.

801. சிறு கோரிக்கை நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைமுறை பற்றிய பின்வரும் சிறப்பு ஏற்பாடுகள் இதனகத்து முன்னர் அடங்கியுள்ள பொது ஏற்பாடுகளை, ஆனல், அத்தகைய ஏவையேனும் ஏற்பாடுகள் அத்தகைய நீதிமன்றங்களுக்கு ஒன்றில் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ ஏற்புடைத்தாகின்ற அளவுக்குமட்டுமே, மட்டுப்படுத்துவதாகவும் கட்டுப்படுத்துவதாகவும் எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய பொது ஏற்பாடுகள், இவ்வத்தியாயத்தில் அடங்கியுள்ள சிறப்பு ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராதிருக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் எல்லா அம்சங்களிலும் சிறு கோரிக்கை நீதிமன்றங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்; ஆனல், அத்தகைய இசைவின்மையெதுவும் காணப்படுகின்றவிடத்து, இதனகத்து அடங்கியுள்ள சிறப்பு ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

வழக்குரைகள்

பிராதையும் ஏனைய வழக்குரைகளையும் கோப்பிடுதல்.

802. (1) சிறு கோரிக்கை நீதிமன்றத்தில், தெளிவானதும் திட்பமானதுமான மொழியில் அமைந்த, முறையாகக் கையொப்பமிடப்பட்ட, எழுத்திலான கூற்றொன்று வழக்காளியினல் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுவதன்மூலம் அல்லது அனுப்பிவைக்கப்படுவதன்மூலம் வழக்கொன்று தொடுக்கப்படலாம் அல்லது வழக்காளி அத்தகைய நீதிமன்ற நீதிபதிக்கு தமது வழக்கை வாய்மூலம்கூற, அவர் அதனை எழுத்துருவில் வடிப்பித்து அதற்கு வழக்காளியின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்வதன்மூலம் வழக்கொன்று தொகுக்கப்படலாம், அத்துடன் அவ்வாறு எழுத்தில் எடுக்கப்பட்ட கூற்று அல்லது நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது அனுப்பி வைக்கப்பட்ட கூற்று அவ்வழக்கில் பிராதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) சிறு கோரிக்கை நீதிமன்றங்களிலான வழக்குரைகள் பின்வருவனவற்றுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும் :—

(அ) வழக்காளியின் பிராது ;

(ஆ) எதிராளியின் மறுமொழியும் எதிர்க் கோரிக்கையும் (எதுவும் இருந்தால்) ;

(இ) எதிராளியின் எதிர்க்கோரிக்கைக்கு வழக்காளியின் பதில். ஆனால், எதிர்க் கோரிக்கையெதுவும் இல்லாவிடத்து, மறுமொழிக்கு அப்பால் மேலும் வழக்குரைகள் எவையும் இருத்தல் ஆகாது.

பிராது இலக்கமிடப்பட வேண்டும்

803. பிராதானது அல்லது பிராதென்ற வகையான கூற்றானது, எவ்வொழுங்குமுறையில் நீதிமன்றத்தில் அது கோப்பிடப்பட்டதோ, அவ்வொழுங்குமுறையிலான நீதிமன்றத் தொடர் இலக்கத்தையும், அது கோப்பிடப்பட்ட நாளின் தேதியையும், ஆண்டையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கட்சிக்காரர்களின் பெயர்களையும் அவர்களின் வதிவிடங்களையும் பற்றிக் கூறுதலும் வேண்டும்.

பிராது வழக்கு காரணத்தைக் கூறுதல் வேண்டும்.

804. பிராதானது, வழக்குக் காரணமாக வழக்கையும் நிகழ்வுகள் பற்றித் தெளிவாகவும், நேரடியான முறையிலும் கூறுதல் வேண்டும்.

எவ்வழக்கு காரணங்கள் இணைக்கப் படலாம் என்பது.

805. வழக்காளி ஒரே பிராதில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழக்குக் காரணங்களை, அவை—

(அ) வழக்குக்கான ஒரே விடயத்தோடு தொடர்புபட்ட அதே கொடுக்கல் வாங்கலில் இருந்து அல்லது கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுந்தால் ; அல்லது

(ஆ) வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தத்திலிருந்து எழுந்தால்,

ஒன்றிணைக்கலாம் ;

ஆயின், அவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட வழக்குக்கான காரணங்கள் எல்லாம் ஒன்றோடொன்று ஒத்திருக்கின்றன என்றும், அவை வழக்காளியை ஒரே விதமான நிவாரணத்துக்கு உரித்தாக்குகின்றனவென்று, அவை எல்லாக் கட்சிக்காரர்களையும் பாதிக்கின்றனவென்றும் பிராதின் புறத்தோற்றத்தில் தோன்றுதல் வேண்டும்.

அழைப்புக் கட்டளை வழங்குதல்.

806. மேற்கூறப்பட்டவாறுக அத்தகைய பிராது அல்லது கூற்று கோப்பிடப்பட்டதன்மேல், நீதிமன்றம், அதன்மீதான குறிப்பொன்றின்மூலம், எதிராளி தோன்றுவதற்கான நாளொன்றை நியமித்தல் வேண்டும். அத்தகைய நாளானது, நீதிமன்றத்தில் வழங்குத் தொடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்டும் அத்தகைய நாளானது, நீதிமன்றத்தின் வழக்குத் துடன் அதுபற்றி அந்த வழக்காளிக்கு அல்லது அவரது சட்டத்தரணிக்கு அறிவிக்க வேண்டும்; அத்துடன் எதிராளி தோன்றுவதற்கானதும் கட்சிக்காரர்களின் பெயர்கள், வதிவிடங்கள், உரிமைக் கோரிக்கையின் சாராம்சம், வழக்கு இலக்கம் ஆகியவற்றைக் கூறுகின்றதுமான அழைப்புக் கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும். அத்தகைய அழைப்புக் கட்டளை ஒவ்வொன்றும், முதலாம் அட்டவணையிலுள்ள 16 ஆம் இலக்கப் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

### அழைப்புக் கட்டளை

அழைப்புக் கட்டளை அனுப்புதல் பற்றியது.

807. சிறு கோரிக்கை நீதிமன்றம் எதனிலிருந்தும் வழங்கப்படுகின்ற எல்லா அழைப்புக் கட்டளைகளும், கட்டளைகளும், அத்துடன் வேறு மன்றுணைகளும், நீதிமன்றப் பதிவாளரினல் ஒப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இலங்கைக்குள் இருக்கும் பிசுக்கால் எவருக்கும், சேர்ப்பித்தலுக்காக அல்லது நிறைவேற்றுதலுக்காக அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும் :

ஆயின், (நிறைவேற்று எழுத்தாணைகளும் உடைமை எழுத்தாணைகளும், தவிர்ந்த) அழைப்புக்கட்டளை, கட்டளை அல்லது மன்றுணை எதுவும், பிசுக்காலுக்கு அனுப்பிவைக்கப்படுவதைக் காட்டிலும், வேறுவிதமாக மிகவும் வசதியாக அல்லது விரைவாகச் சேர்ப்பிக்கப் படலாம் என நீதிமன்றத்துக்குத் தோன்றச் செய்யப் படுகின்றவிடத்து, அத்தகைய அழைப்புக் கட்டளை, கட்டளை அல்லது மன்றுணை எதனிலும் இடப்படுகின்ற புறக்குறிப்புமூலம், அதன்கண் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆள் எவரினுலும் அது சேர்ப்பிக்கப்படலாம் எனப் பணிப்பது, நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின், மேலும் நீதிமன்றம் பிசுக்கால் தமது கட்டுப் பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாக, மேலே குறித்துரைக்கப்பட்டவாறுக, எதிராளியிடம் அழைப்புக் கட்டளையைச் சேர்ப்பிக்கத் தவறுகின்ற

விடத்து, நீதிமன்றம் அதன் தற்றுணிபில், அழைப்புக் கட்டளை திருப்பியனுப்பப்படுவதற்கென நிர்ணயிக்கப் பட்ட காலப்பகுதியை வேறொரு தேதிக்கு நீடிக்கலாம். (அத்தகைய தேதியானது, எத்தேதியன்று எதிராளி முதன்முறையாகப் பிராதுக்கு மறுமொழி அணைக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டாரோ, அத்தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாததொன்ருக இருத்தல் வேண்டும்).

அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்படுதல் பற்றி.

808. இக்கட்டளைச்சட்டத்தின் 59 ஆம் பிரிவிலிருந்து 71 ஆம் பிரிவு வரையிலான பிரிவுகளும் (இது 59, 71 ஆகிய இரு பிரிவுகளையும் உள்ளடக்கும்). அத்துடன் (XXIII) ஆம் அத்தியாயமும், கடைசியாக முற்போந்த பிரிவிலடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அவை ஒவ்வாதன வாக இராதளவுக்கு, சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்படுதல் திருப்பி அனுப்பப்படுதல், அத்துடன் சேர்ப்பிக்கப்பட்டமைக்கான என்பிப்பு ஆகியவற்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

### தோன்றுவதன்மீதான வழக்கு நடவடிக்கைகள்

எதிராளி தோன்றி, கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது மறுத்தல்.

809. (1) வழக்காளியினது கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு அல்லது மறுக்குமாறு அழைப்புக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடத்திலும் தேதியன்றும், எதிராளி கேட்டுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

எதிராளி கோரிக்கையை ஏற்றுக்கொண்டால்.

(2) எதிராளி கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுவாராஞல், அத்தகைய ஏற்றுக்கொள்ளுகை பற்றி, முதலாம் அட்டவணையில் உள்ள 135 ஆம் இலக்கப் படிவத்தில், நீதிமன்றம் வழக்குப் பதிவேட்டில் பதிதல் வேண்டுமென்பதுடன் அதிற் கையொப்பமிடுமாறு எதிராளியைத் தேவைப்படுத்துதலும் வேண்டும். அத்துடன் வழக்காளிக்குச் சாதகமாகத் தீர்ப்பு ஆக்குதல் வேண்டும் :

ஆயின் வசதியாக நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்க முடியாத எதிராளி, தமக்குத் தெரிந்த சட்டத்தரணி முன்னிலையிலும் அச்சட்டத்தரணியின் அத்தாட்சிப் படுத்தலின்கீழும் தம்மால் கையொப்பமிடப்பட்ட ஏற்றுக்கொள்கையைப் பதிவாளரிடம் சமர்ப்பித்தல் அவருக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏற்றுக்கொள்ளுகையைப் பெற்றுப் பதிந்ததன்மேல், நீதிமன்றம் அதற்கிணங்க வழக்காளிக்குச் சாதகமாகத் தீர்ப்பு ஆக்குதல் வேண்டும்.

(3) கோரிக்கையை எதிராளி மறுப்பாரானுல் உடன டியாக அல்லது காரணம் காட்டப்பட்டதன்மேல் நீதி மன்றம் அனுமதிக்கக்கூடியவாருன அத்தகைய காலத் துக்குள்ளாக அம்மறுப்புப்பற்றி வழக்குரைக்குமாறு அவர் கேட்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அவர் ஒன் றில் தமது எதிர்வாதத்தை நீதிமன்றத்தில் வாய்மூலமா கக் கூறவேண்டும். நீதிமன்றம் அதனை எழுத்தில் வடிப் பித்து அதற்கு எதிராளியின் கையொப்பத்தைப் பெற் றுக்கொள்ள வேண்டும்; அல்லது தமது எதிர்வாதத் தையும் வழக்காளிக்கெதிராக அவர் கொண்டிருக்கக் கூடிய எதேனும் எதிர்க் கோரிக்கையையும் எடுத்துக் காட்டி 73 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாருன முறையாக முத்திரையிடப்பட்ட எழுத்திலான மறுமொ ழியொன்றைப் பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அத்தகைய மறுமொழி எதிராளியினுல் அல்லது அவரது சட்டத்தரணியினுல் ஒப்பமிடப்படுதல் வேண்டும் என் பதுடன் பதிவாளரினுல் முறையாக முத்திரையிடப் பட்டு தேதியிடப்பட்டு உடனடியாக வழக்குப் பதிவேட் டில் கோப்பிடப்படுதலும் வேண்டும்.

கட்சிக்காரர்களை விசாரணை செய்தல்.

810. கட்சிக்காரர்களுக்கிடையே பிணக்கிலுள்ள விட யங்களைக் கண்டறியும் கருத்துடனும் அவசியமற்ற சாட் சியத்தை விட்டுவிடும் கருத்துடனும் வழக்கு நடவடிக் கையின் எந்தக் கட்டத்திலும் கட்சிக்காரர்கள் நீதி மன்றத்தினுல் விசாரணை செய்யப்படலாம்.

எதிர்க் கோரிக்கை பற்றி.

811. எதிராளி தமது மறுமொழியுடன் எதிர்க்கோ ரிக்கையொன்றையும் வழக்குரைத்தால், அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அல்லது மறுக்குமாறு வழக்காளி கேட் கப்படவேண்டும். அந்த எதிர்க்கோரிக்கையை அவர் மறுப்பாரானுல், வழக்காளி உடனடியாக அல்லது நீதி மன்றம் நிர்ணயிக்கும் அத்தகைய மேலதிக காலத்தில் அதுபற்றி வழக்குரைக்குமாறு தேவைப்படுத்தப்படு வார் என்பதுடன் 809 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரி வின் ஏற்பாடுகள், எதிராளியின் எதிர்க்கோரிக்கைக் கான வழக்காளியின் மறுமொழி தொடர்பில், ஏற் புடைத்தாகும் அளவுக்கு, ஏற்ற மாற்றங்களுடன், ஏற் புடையனவாதல் வேண்டும்:

ஆயின் எவ்வாருயினும், வழக்காளி தமது மூலப்பிரா தின் வழக்குரைத்திருக்கக்கூடிய, புதிய வழக்குக் காரணமொன்ருக அமையும் புதிய விடயம் எதனையும் எச்சந்தர்ப்பத்திலும் தமது மறுமொழியில் எடுத்துக் காட்டுதல் ஆகாது.

ஏற்றுக்கொள்ளுகையைப் பதிதல் பற்றி.

812. வழக்காளி எதிர்க்கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் அத்தகைய ஏற்றுக்கொள்ளுகையை நீதிமன்றம் வழக்குப் பதிவேட்டில் பதிதல் வேண்டுமென்பதுடன் வழக்காளியை அதில் கையொப்பமிடுமாறு தேவைப்படுத்துதலும் வேண்டும்.

வழக்குரைகள் தொடர்பிலான நானாவித ஏற்பாடுகள்

கணக்கின்மீது அல்லது பணக் கொடுப்பனவுக்கான சாதனத்தின்மீது தொடங்கப்படும் வழக்கு.

813. கணக்கொன்றின்மீது அல்லது பணக்கொடுப்பனவுக்கான சாதனமொன்றின்மீது மாத்திரம் தொடங்கப்படும் வழக்கெழு காரணமொன்றை அல்லது எதிர்க்கோரிக்கையொன்றை எடுத்துக்காட்டும் நோக்கத்துக்காக, நீதிமன்றத்தில் அந்தச் சாதனத்தை அல்லது அக்கணக்கின் பிரதியொன்றை ஒப்படைத்து, அதன்மேல், தாம் அறவிடுவதற்கு இருக்கின்ற அல்லது எதிரீடு செய்ய இருக்கின்ற குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையொன்று எதிர்க்கட்சிக்காரரிடமிருந்து தமக்கு வருமதியாயுள்ளதென்று கூறுவது, அக்கட்சிக்காரருக்குப் போதுமானதாதல் வேண்டும்.

முக்கியமல்லாத வேறுபாடு புறக்கணிக்கப்படுதல் வேண்டும்.

814. வழக்குரையொன்றிலுள்ள சாட்டுரையொன்றுக்கும் எண்பிப்புக்கும் இடையிலுள்ள வேறுபாடொன்றானது அத்தகைய எண்பிப்பானது புதியதொரு வழக்கெழு காரணத்தை வெளியிட்டாலொழிய அல்லது அதன் மூலம் எதிர்க்கட்சிக்காரர் அவரது பாதிப்புக்கு தவறாக வழிநடத்தப்பட்டிருக்கிறாரென நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழிய, முக்கியமல்லாததென்று புறக்கணிக்கப்படுதல் வேண்டும்.

வழக்குரைகளைத் திருத்துதல்.

815. சிறு கோரிக்கை நீதிமன்றங்களில் வழக்குரைகளைத் திருத்துதல் தொடர்பாக 93 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

எதிர்க்கோரிகை பற்றி வழக்குரைப்பதற்கு ஆன அசட்டையின் விளைவு.

816. ஏதேனும் வழக்கில் அவ்வழக்கு விளக்கத்தில் அவருக்கு அனுமதிக்கப்பட்டிருக்கக்கூடிய அதையொத்த காரணத்துக்காக, தமது சார்பில் வழக்குக் காரணமொன்றைக் கொண்டுள்ள எதிர்க் கோரிக்கையொன்றை எதிராளி இடையிற் புகுத்தத் தவறுகின்றவிடத்து அவரும் அவர் மூலமாக அல்லது அவரிடமிருந்து அதற்கான உரித்தைப் பெறுகின்ற ஆளெவ்வெவரும், அதை அறவிடுவதற்கான வழக்கொன்றைத் தொடருவதிலிருந்து, அதன்பின்னர் எப்போதும் தடைசெய்யப்படுதல் வேண்டும்.

816 ஆம் பிரிவு ஏற்புடைத் தாகா விடயங் கள்.

817. கடைசியாக முற்போந்த பிரிவின் அடங்கி யுள்ள தடையானது, பின்வரும் விடயங்களுக்கு ஏற்பு டைத்தாகாது :

(அ) எதிர்க்கோரிக்கைத் தொகையானது நீதிமன்றத் தின் பணவகையான நியாயாதிக்கத்தை விஞ் சுவதாக இருக்கின்றவிடத்து ;

(ஆ) எதிர்க்கோரிக்கையானது, எவ்வழக்கில் அது இடையிற் புகுத்தப்பட்டிருக்குமோ, அவ்வழக் குத் தொடங்குவதற்கு முன்னர் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றைக் கொண்டுள்ளவிடத்து ;

(இ) எதிர்க்கோரிக்கையானது, தொகை தீர்மானிக் கப்படாத சேதவீடுகளுக்கானதாக இருக்கின்ற விடத்து ;

(ஈ) எதிர்க்கோரிக்கையானது, வழக்குத் தொடங்கப் பட்ட நேரத்தில், எக்கோரிக்கையின் மீது வேறொரு வழக்கொன்று முடிவுறுதிருக்கின் றதோ, அக்கோரிக்கையொன்றைக் கொண்டுள் ளவிடத்து ;

(உ) எதிராளிக்கு அமைப்புக்கட்டளையானது நேரடி யாகச் சேர்ப்பிக்கப்படாமல் அல்லது அவரின் தோன்றுதலொன்றில்லாமல், எதிராளிக்கெதிரா கத் தீர்ப்பானது எடுக்கப்படுகின்றவிடத்து.

எதிர்க்கோரிக் கை மீதான தீர்ப்பு.

818. வழக்காளியின் கோரிக்கைக்குச் சமானமான எதிர்க்கோரிக்கையொன்று தாபிக்கப்படுகின்றவிடத்து, தீர்ப்பானது எதிராளிக்குச் சாதகமாக இருத்தல் வேண்டும் ; வழக்காளியின் கோரிக்கையை அது விஞ் சுகின்றவிடத்து, மேன்மிகைக்கு அல்லது வழக்காளியிட மிருந்து வருமதியானதாக இருக்கின்றவாறான அவ்வள விற்கே எதிராளிக்கான தீர்ப்பு இருத்தல் வேண்டும்.

## விளக்க நாளைக் குறித்தல்

விளக்கத்திற்கு வழக்கைக் குறித்தல்.

819. (1) எண்ணூற்றென்பதாம் பிரிவின் (3) ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, எதிராளியின் வாய்மொழி மூலமான எதிர்வாதம் வழக்குப் பதிவேட் டில் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அல்லது அவரது எழுத்திலான மறுமொழி பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், உடனடியாக அல்லது எதிர்க்கோரிக்கை யொன்று இருக்கின்றவிடத்து, 811 ஆம் பிரிவினால் ஏற் பாடு செய்யப்பட்டவாறாக அதுபற்றி வழக்குரை செய் யப்பட்டதன் பின்னர், உடனடியாக நீதிமன்றம் வழக்கு விளக்கத்துக்கான தேதியொன்றைக் குறித்தல் வேண் டும். அத்துடன், வழக்குப் பதிவேட்டில் அதுபற்றிய

குறிப்பொன்றைப் பதிதல் வேண்டும் ; அத்துடன் விளக்கத்துக்கெனக் குறிக்கப்பட்ட எல்லா வழக்குகளும், அந்நோக்கத்திற்கெனக் குறிக்கப்பட்ட எல்லா வழக்குகளும், அந்நோக்கத்திற்கெனப் பதிவாளரினால் வைத்திருக்கப்படும் விளக்க இடாப்பில் அவற்றில் சரியான ஒழுங்குமுறையில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் அவை எவ்வொழுங்கு முறையில் பதியப்பட்டனவோ, அவ்வொழுங்குமுறையில் விளக்கத்திற்கு எடுக்கப்படுதலும் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், காரணம் காட்டப்பட்டதன் மேல் வழக்கெதனையும் அதன் ஒழுங்கு வரிசைப்படியல்லாது எடுத்து அதை விளங்குவது நீதிமன்றத்துக்குத் தகுதி வாய்ந்ததாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நாளன்று, ஆய்நிகழ்வுகள் எவையேனும் ஆவணங்களின் நம்பத்தகுதகைமை பற்றிக் கட்சிக்காரர்களினால் செய்யப்படும் ஏற்றுக்கொள்ளுகை (எதுவும் இருந்தால்) அதனை நீதிமன்றமானது வழக்குப் பதிவேட்டில் பதிவு செய்தல் வேண்டுமென்பதுடன் வழக்கெழு வினாக்களைத் தீர்மானிக்க முற்படுவதும்வேண்டும்.

சாட்சிக்காரர்களின் நிரல்.

(3) விளக்கத்துக்கு தேதி குறிக்கப்பட்டவுடன், கட்சிக்காரர்கள் தமது சாட்சிக்காரர்களின் நிரலொன்றையும் விளக்கத்தில் அளிக்கப்படும் சான்றில் தாம் சமர்ப்பிக்க உத்தேசித்திருக்கும் ஆவணங்களினது நிரலொன்றையும் கோப்பிடுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய சாட்சிக்காரரின் பெயரும் அத்தகைய ஆவணத்தின் விவரணமும் அத்தகைய நிரலில் எவரும் விசாரணை செய்யப்படலாகாதென்பதுடன் ஆவணமெதுவும் சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுதலும் ஆகாது.

## ஒத்திவைப்புகள்

ஒத்திவைப்புக்கள்.

820. சிறு கோரிக்கை நீதிமன்றங்களிலான ஒத்திவைப்புகள் தொடர்பாக கட்டளைச் சட்டத்தின் 143 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஒத்திவைப்பின் மேல் சாட்சிகளின் விசாரணைக்கு நீதிமன்றம் கட்டளையிடலாம்.

821. ஒத்திவைப்புக்கான விண்ணப்பமொன்றை வழங்கியதன்மேல், நீதிமன்றம், பதியப்படவேண்டிய, ஏராணைப் போதிய காரணம் காண்பிக்கப்பட்டாலொழிய, வருகைதந்திருக்கும் சாட்சிக்காரர் எவரும் அப்போது விசாரணை செய்யப்படலாமெனப் பணிக்கலாம் ; அத்துடன் அவ்வாறு விசாரணை செய்யப்படும் சாட்சிக்காரர் ஒருவரின் சாட்சியமானது வழக்குப் பதிவேட்டில் பதியப்படல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சாட்சிக்காரரின் சாட்சியமாக, அது விளக்கத்தின் போது வாசிக்கவும் படலாம்.

இருந்த தொகையை (அப்படி எதுவும் இருந்தால்) நீதிமன்றத்துக்கு வழக்காளி செலுத்தியதன்மேல், புதிய வழக்கொன்றைத் தொடுப்பதற்கு நீதிமன்றம் அவருக்கு அனுமதி வழங்கலாம்.

தவறுகை மூலமான தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் இல்லை என்பது.

(6) இச்சட்டக்கோவையில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், வருகை தராத தவறுகைக்காக இப்பிரிவின் கீழ் பதியப்பட்ட தீர்ப்பெதற்கும் எதிராக மேன்முறையீடு எதுவும் இருத்தலாகாது.

சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கு 84 தொடங்கி 88 வரையிலான பிரிவுகள் ஏற்புடையனவாகா.

(7) பிரிவுகள் 84 தொடங்கி 86 வரையிலான பிரிவுகள், (இதில் 84 ஆம் பிரிவும் 88 ஆம் பிரிவும் உள்ளடங்கும்) சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கு ஏற்புடையனவாகா.

### வீணுக்கொத்துக்கள்

சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கு 94 தொடங்கி 100 வரையிலான பிரிவுகள் ஏற்புடையனவாகா.

823. பிரிவுகள் 94 தொடங்கி 100 வரையிலான பிரிவுகள் (இவ்விரண்டும் உள்ளடங்கும்) சிறு கோரிக்கை நீதிமன்றங்களுக்கு ஏற்புடையனவாகா.

### சாட்சிக்காரர்களின் வருகைபற்றி

சாட்சிக்காரர்களின் வருகை.

824. சாட்சிகள் வருகைதருவதைக் கட்டாயப்படுத்துவதற்கான சிறு கோரிக்கை நீதிமன்றத்தின் விதிமுறையானது அழைப்புக் கட்டளைமூலமானதாக இருத்தல் வேண்டும்: இவ் அழைப்புக் கட்டளையில் சாட்சிக்காரர்களின் உடைமையில் அல்லது அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஆவணங்களை அவர்கள் சமர்ப்பிப்பதைத் தேவைப்படுத்துகின்ற வாசகம் ஒன்று அதில் இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம்; அத்துடன், அத்தகைய ஒவ்வொரு அழைப்புக் கட்டளையும் பொருளளவில் முதலாம் அட்டவணையிலுள்ள 136 ஆம் இலக்கப் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

121 ஆம் பிரிவு தவிர்ந்த XVII ஆம் அத்தியாயம் சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கு ஏற்புடையதாதல்.

825. நூற்று இருபத்தோராம் பிரிவு தவிர்ந்த, இக் கட்டளைச் சட்டத்தின் XVII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், சிறு கோரிக்கை நீதிமன்றங்களிலான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

### விளக்கம் பற்றி

விளக்கம்.

826. விளக்க நாளன்று நீதிபதி, சட்டத்துக்கிணங்க வழக்கை விசாரித்துத் தீர்ப்பளித்தல் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகள் பற்றிய பதிவேடு

827. கட்சிக்காரர்களினது விசாரணை, சாட்சிக்காரர்கள் சாட்சியம், அத்துடன் வழக்கினது மற்றெல்லா வழக்கு நடவடிக்கைகள் ஆகியவைபற்றிய முழுமையானதும் பூரணமானதுமான வழக்குப் பதிவேடொன்று வைத்திருக்கப்படல் வேண்டும்.

சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கு எந்த அளவுக்கு XIX ஆம் அத்தியாயம் ஏற்புடைத்தாகும் என்பது.

828. இக்கட்டளைச்சட்டத்தின் XIX ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளானவை, இவ்வத்தியாயத்திலுள்ள ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராத அளவுக்கு சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

தீர்க்கமான தொகைக் கோரிக்கைகள் மீதான வழக்கு சுருக்கமுறை நடவடிக்கை மூலதனமாதல்.

829. (1) வழக்கெதிலும் உரிமைக் கோரிக்கையானது, தீர்க்கமான தொகையொன்றுக்கான, நாணய மாற்று உண்டியல் ஒன்றின் மீது, வாக்குறுதிப்பத்திரத்தின் மீது அல்லது காசோலை மீது அல்லது சாதனத்தின் மீது அல்லது எழுத்திலான ஒப்பந்தத்தின் மீது எழுகின்ற தனிசு ஒன்றுக்காக அல்லது தீர்க்கமான தொகைக் கோரிக்கையொன்றுக்காக இருக்கின்றவிடத்து, அல்லது முதல்வருக்கெதிரான கோரிக்கையானது அத்தகைய தனிசு அல்லது தீர்க்கமான தொகைக் கோரிக்கை, உண்டியல் பத்திரம் அல்லது காசோலை தொடர்பிலானதாக இருக்கின்றவிடத்து, உத்தரவாதம் ஒன்றின்மீது உரிமைக்கோரிக்கை ஒன்று இருக்கின்றவிடத்து, அத்துடன் வழக்காளி சுருக்கமுறை நடவடிக்கை மூலம் வழக்கொன்றைத் தொடர விரும்புவாரானால் அவர் இக்கட்டளைச்சட்டத்தின் LIII ஆம் அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற முறையில் அத்தகைய வழக்கைத் தொடுக்கலாம். அத்துடன் 710 ஆம் பிரிவு தவிர்ந்த, அவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள், அத்தகைய எவையேனும் நோக்கங்களுக்காக, சிறு கோரிக்கை நீதிமன்றங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பேணல் வாசகம்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின் LIII ஆம் அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைத் தவிர, அத்தகைய ஏதேனும் வழக்கிலான நடவடிக்கைமுறையானது, இவ்வத்தியாயத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளில் உள்ள நடவடிக்கை முறையைப் போன்றே இருத்தல் வேண்டும்.

183அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளை விசாரித்தல்.

(3) வழக்குக்கான கட்சிக்காரர்களினால் செய்யப்படும் சத்தியக்கடதாசி தொடர்பில் இக்கட்டளைச் சட்டத்தின் 183 அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளானவை சிறு கோரிக்கை நீதிமன்றங்களில் செய்யப்படுகின்ற சத்தியக் கடதாசிகள் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## தீர்ப்புப் பற்றி

தீர்ப்புகளும் தீர்வைகளும்.

830. சிறு கோரிக்கை நீதிமன்றங்களிலான தீர்ப்புக்கள் வழக்குப் பதிவேட்டில் எழுத்தில் பதியப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் வழங்கப்படல் வேண்டும்; அத்துடன் இக்கட்டளைச்சட்டத்தின் XX ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், இவ்வத்தியாயத்திலுள்ள ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராதிருக்கும் அளவுக்கு சிறு கோரிக்கை நீதிமன்றங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

மேன்முறையீடும், மேன்முறையீடு முடிவுறுதிருக்கும் போது நிறைவேற்றுதலை இடைநிறுத்தம் செய்தலும்.

831. மேன்முறையீடானது, முடிவுறுதிருக்கும்போது, மேன்முறையீடுகள் தொடர்பிலும் நிறைவேற்றுதல் இடைநிறுத்தம் செய்யப்படுவது தொடர்பிலும் நிறை இடைநிறுத்தம் செய்யப்படுவது தொடர்பிலும் LVIII, LIX, LX, LXI அத்துடன் LXII ஆகிய அத்தியாயங்களின் ஏற்பாடுகள், இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுடன் அவை ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு சிறு கோரிக்கை நீதிமன்றங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## நிறைவேற்றுதல்கள்

நிறைவேற்றுதல்கள்.

832. (1) இக்கட்டளைச் சட்டத்தின் XXII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுடன் அவை ஒவ்வாதனவாக இராத அளவுக்கு சிறு கோரிக்கை நீதிமன்றங்களின் எல்லா நிறைவேற்றுதல்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) தீர்வையொன்றை நிறைவேற்றுவதிற் பெறப்பட்டிருக்கின்ற பணமானது, தீர்வை பெற்றவருக்கு அத்தகைய பணத்துக்கு வேறு ஆள் எவரினாலும் அல்லது வேறு ஆட்கள் எவர்களினாலும் செய்யப்பட்ட ஏதேனும் கோரிக்கை பற்றி நீதிமன்றத்தினால் அறிவித்தல் எதுவும் பெறப்பட்டிருக்காவிட்டால், அவரது ஒருபுடையான விண்ணப்பத்தின் மேல், கொடுபடல் வேண்டும்.

செலவு தொகைகள் கணிக்கப்படுதலும்,
முத்திரைத் தீர்வையும்.

செலவுதொகைகள் கணிக்கப்படுதலும் முத்திரைத் தீர்வையும்.

833. (1) மேற்கூறப்பட்டவாறு, நிறைவேற்றுதலுக்கான எழுத்தாணையெதுவும் வழங்கப்படுமுன்னர், எழுத்தாணைக்கென விண்ணப்பிக்கின்ற கட்சிக்காரரினது வேண்டுகோளின்பேரில், பதிவாளர் வழக்கின் செலவு தொகைகளையும் செலவுகளையும் எதிர்க்கட்சியினருக்கெதிராக உடனடியாகக் கணித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வழக்குப் பதிவேட்டில் அத்தகைய கணிப்புச் செய்ததைப் பற்றியும் அதற்கென அனுமதிக்கப்பட்ட தொகைபற்றியும் குறிப்பொன்றைப் பதிதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய செலவு தொகைகளும் செலவுகளும் எல்லா வழக்குகளிலும் கணிக்கப்படல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதி வரிகளின்படி கொடுபடற்பாலனவாதலும் வேண்டும்.

(2) சிறு கோரிக்கை நீதிமன்றங்களிலான சகல வழக்கு நடவடிக்கைகளும் 1983 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, முத்திரைத்தீர்வைச் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும்.

மேன்முறையீடுகள்

மேன்முறையீடுகள்.

833அ. (1) தனிசுக்கான, சேதவீட்டுக்கான அல்லது கோரிக்கைக்கான எந்த வழக்கிலும், ஏதேனும் சிறு கோரிக்கை நீதிமன்ற நீதிபதியினால் வழங்கப்படுகின்றதும், இறுதித் தீர்ப்பின் பயனைக் கொண்டிருக்கின்றதுமான தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளை எதற்குமெதிராக, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், சட்ட விடயமொன்றின் மீதொழிய அல்லது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளுவதன் மீதொழிய அல்லது சாட்சியத்தை நிராகரிப்பதன் மீதொழிய அல்லது நீதிமன்றத்தின் அனுமதியுடன் தவிர மேன்முறையீடெதுவும் செய்யப்படுதலாகாது.

(2) மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்க நீதிபதியானவர் மறுக்கின்றவிடத்து, அத்தகைய மறுப்புத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக அதனால் இன்னலுற்ற கட்சிக்காரரானவர், மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி பெறுவதற்கென

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மனுவென்ற முறையில் எழுத்திலான விண்ணப்பமொன்றை சிறு கோரிக்கை நீதிமன்றத்தில் அணைப்பது அக்கட்சிக் காரருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பமானது, வழக்கின் எல்லாப் பத்திரங்களுடனும் வழக்கு நடவடிக்கைகளுடனும், மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்க மறுத்த அவருடைய ஏதுக்களினதும் காரணங்களினதும் பதிவேடொன்றுடன் உடனடியாக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியினால், அது ஒருபுடையாகக் கையுதிர்க்கப்படலும் வேண்டும். விண்ணப்பத்தை விசாரித்ததன் மேல் மேன்முறையீட்டுக்கு நீதிபதியானவர் அனுமதி வழங்குவாரானால், அத்தகைய நிபந்தனைகளின் மீதும் நீதிபதிக்குத் தகுந்ததெனத் தோன்றுகின்ற அத்தகைய காலத்துக்குள்ளும், மேன்முறையீட்டு மனுவொன்றை ஏற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றத்துக்கு அவர் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

முத்திரை வரியிலிருந்து விலக்கு.

833ஆ. என்னூற்று முப்பத்து மூன்று அ என்னும் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும், கோப்பிடப்பட்ட அல்லது காண்பிக்கப்பட்ட ஆவணங்கள் யாவும் 1983 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும்.

## அத்தியாயம் LXVI

### எக்காணியில் சமாதானக் குலைவொன்று அச்சுறுத்தப்பட்டுள்ளதோ அல்லது சாத்தியமாகவுள்ளதோ அக்காணியைப் பாதிக்கும் பிணக்குகள் மீதான விசாரணைகள்.

காணியைப் பாதிக்கும் பிணக்குகள் பற்றிய குறிப்பீடுகள்.

833இ. (1) காணியைப் பாதிக்கும் பிணக்கொன்று சம்பந்தமாக எப்போதாயினும் சமாதானக் குலைவொன்று அச்சுறுத்தப்பட்டுள்ளபோது அல்லது சாத்தியமாகவுள்ளபோது,

(அ) பிணக்கை விசாரிக்கின்ற பொலிசு அலுவலர்,

(i) பிணக்குத் தொடர்பான கூற்றொன்றை, காணி எந்தச் சிறுகோரிக்கை நீதிமன்ற நியாயாதிக்கத்துள் அமைந்துள்ளதோ அந்தச் சிறுகோரிக்கை நீதிமன்றத்தில், இயன்றளவு குறைந்த தாமதத்தோடு கோப்பிலிடுதல் வேண்

டும் என்பதுடன், பிணக்குக்கான கட்சிக்காரர் ஒவ்வொருவரும், சிறு கோரிக்கை நீதிமன்ற நீதிபதி முன் தோன்றுதலுக்கான பிணைமுறியொன்றினை எழுதி நிறைவேற்றுதல் வேண்டும் அல்லது அத்தகைய தகவலைக் கோப்பிலிடும் தேதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பிந்தாத ஒரு தேதியன்று தோன்றுமாறு கட்சிக்காரரை எச்சரித்தல் வேண்டும்; அல்லது

(ii) சமாதானத்தைப் பேணுதற்கான அக்கறைக்கு அவசியமானால் சட்டத்துக்கிணங்க நடவடிக்கையெடுக்கப்படுவதற்காக பிணக்குக்கான கட்சிக்காரரைக் கைதுசெய்வதுடன் காணியானது, எந்தச் சிறுகோரிக்கை நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ, அந்தச் சிறு கோரிக்கை நீதிமன்றத்தின் முன், காலந்தாழ்த்தாது கொண்டுவருதலும் வேண்டும். அத்துடன் அதே நேரத்தில் பிணக்குத் தொடர்பான கூற்றை அந்த நீதிமன்றத்தில் கோப்பிலிடுதலும் வேண்டும்.

(ஆ) அத்தகைய பிணக்குக்கான எவரேனும் கட்சிக்காரர், சத்தியக் கடதாசி மூலம் நிகழ்வுகளையும், உசாவுகின்ற நிவாரணத்தையும் குறிப்பிட்டும் அத்துடன் பிணக்குக்கான மற்றைய கட்சிக்காரரின் பெயர்களையும் முகவரிகளையும் குறித்துரைத்தும் சத்தியக்கடதாசியொன்றைச் சிறுகோரிக்கை நீதிமன்றத்தில் கோப்பிலிடலாம். அதன்பின் அத்தகைய நீதிமன்றமானது அதன் வழமையான நடவடிக்கைமுறை மூலம் அல்லது பதிவு அஞ்சல் மூலம் பெயர்குறிப்பிடப்பட்ட கட்சிக்காரரை அறிவித்தலில் குறித்துரைத்த தேதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குப் பிந்தாத தேதியாகவுள்ள அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய தேதியன்று நீதிமன்றத்தில் தோன்றுமாறு அறிவித்தல் வேண்டும். அத்துடன், அவர்களது கோரிக்கைகளை எடுத்துக் காட்டியும், அவர்கள் எவ் ஆவணங்

களில் தங்கியுள்ளனரோ அவ்வாவணங்களை (அல்லது அவற்றின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளை) இணைத்தும், சத்தியக்கடதாசிகளைக் கோப்பிடும்படி, அவர்களைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் சிறுகோரிக்கை நீதிமன்றமொன்றின் முன் கூற்று அல்லது சத்தியக்கடதாசி ஒன்று கோப்பிலிடப்பட்டுள்ளவிடத்து, சிறுகோரிக்கை நீதிமன்றமானது, எப்பிணக்கு தொடர்பாகத் தகவலானது கோப்பிலிடப்பட்டுள்ளதோ, அப்பிணக்கை விசாரித்து இவ்வத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விதத்தில் அதன்மீது தீர்மானமொன்றை அல்லது கட்டளையொன்றை ஆக்குவதற்கு நியாயாதிக்கம் உடையதாதல் வேண்டும் என்பதுடன் அந்நியாயாதிக்கம் உடையதாதல் வேண்டும் என்பதுடன் அந் நியாயாதிக்கம் அதற்கு இத்தால் உரித்தாக்கவும் படுகின்றது.

(3) முதலாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் (1) ஆம் உட்பந்தியின்கீழ் கட்சிக்காரர்கள் கொண்டுவரப்பட்ட தேதியன்று, அல்லது அவ்வுட்பிரிவில் (அ) என்னும் பந்தியில் (11) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தில் அவர்கள் தோன்றுதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று நீதிமன்றமானது கட்சிக்காரர்கள் அவ்வாறு கொண்டுவரப்பட்ட தேதியிலிருந்து அல்லது அவர்கள் தோன்றுவதற்கென அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குப் பிந்தாத நாளொன்றை நியமித்து, அந்நாளன்று கட்சிக்காரர்களை அவர்களது கோரிக்கைகளை எடுத்துக்காட்டியும் அவர்கள் எவ் ஆவணங்களில் தங்கியுள்ளனரோ அவ்வாவணங்களை (அல்லது அவற்றின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளை) இணைத்தும் சத்தியக்கடதாசிகளை நீதிமன்றத்தில் கோப்பிலிடும்படி பணித்தலும் வேண்டும்.

(4) நீதிமன்றமானது, தகவல் கோப்பிலிடப்பட்டு ஒரு கிழமைக்குப் பிந்தாமல், காணியினைப் பாதிக்கும் பிணக்கு ஒன்று எழுந்துள்ளதாகவும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று (அத்தகைய தேதி, வழக்கானது நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும் அடுத்த தேதியாகும்) அக்கறையுள்ள ஆளெவரையும் நீதிமன்றத்தில் தோன்றுமாறு தேவைப்படுத்தியும், பிணக்கிற்கான விடயப் பொருளாகவுள்ள காணியின் அல்லது காணியின் பாகத்தின் ஏதேனும் துலாம்பரமான இடத்தில் அறிவித்தல் ஒன்றினை ஒட்டச் செய்வித்தலும் வேண்டும்;

அறிவித்தலானது, நீதிமன்றத்தில் தோன்றுவதுடன் அவரது கோரிக்கைகளை எடுத்துக்காட்டி அவர் எவ்வாவணங்களில் தங்கியுள்ளாரோ அவ்வாவணங்களை (அல்லது அவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை) இணைத்துச் சத்தியக்கடதாசிகளை நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டுமென அக்கறையுள்ள ஆளைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

(5) எவையேனும் சத்தியக்கடதாசிகளும் ஆவணங்களும் அவற்றைக் கோப்பிடுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று கோப்பிடப்பட்டவிடத்து, நீதிமன்றமானது சத்தியக்கடதாசிகளைக் கோப்பிடும் கட்சிக்காரர்களின் விண்ணப்பத்தின்மீது, எவையேனும் ஆவணங்களிருப்பின் அவற்றோடு எதிர் சத்தியக்கடதாசிகளை சேர்த்துக் கோப்பிடுவதற்கு அத்தகைய கட்சிக்காரர்களுக்கு இரண்டு கிழமைகளை விஞ்சாத காலத்தை வழங்குதல் வேண்டும். எதிர் சத்தியக்கடதாசிகளைத் தயாரிப்பதற்கென பதிவாளர் முன்னிலையில் பதிவேட்டை நுண்ணுய்வு செய்வதற்கு அத்தகைய கட்சிக்காரர்களை அல்லது அவர்களின் சட்டத்தரணியை நீதிவான் அனுமதித்தல் வேண்டும்.

(6) சத்தியக்கடதாசிகளையும் ஆவணங்களையும் கோப்பிடுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, எதிர் சத்தியக்கடதாசிகளைக் கோப்பிடுவதற்கான விண்ணப்பமெதுவும் செய்யப்பட்டிருக்காதவிடத்து, அல்லது எதிர் சத்தியக்கடதாசிகளைக் கோப்பிடுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று அத்தகைய சத்தியக்கடதாசிகளும் எதிர் சத்தியக்கடதாசிகளும் ஆவணங்களும் கோப்பிடப்பட்டிருந்தாலுஞ்சரி—

(i) நீதிமன்றமானது பிணக்கில் தீர்வொன்றுக்கு வருமாறு, கட்சிக்காரர்களையும், அக்கறையுள்ள எவரேனும் ஆட்களிருப்பின் அவர்களையும் தூண்டுதல் வேண்டும். அத்துடன் கட்சிக்காரர்களும், அக்கறையுள்ள ஆட்களும் தீர்வொன்றுக்கு வர இணங்கினல், தீர்வானது பதியப்படுதல் வேண்டுமென்பதுடன், கட்சிக்காரர்களாலும் அக்கறையுள்ள ஆட்களினலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும். அத்துடன் தீர்க்கப்பட்டவாறன நியதிகளுக்கிணங்க கட்டளையொன்று ஆக்கப்படுதலும் வேண்டும்; அல்லது

(ii) கட்சிக்காரர்களும் அக்கறையுள்ள ஆட்கள், எவரேனுமிருப்பின், அவர்களும் தீர்வொன்றுக்கு இணங்காவிட்டால் நீதிமன்றமானது கோப்பிடப்பட்ட கூற்றுக்களின்மீதும் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசிகள், அத்துடன்

ஆவணங்கள்மீதும் பிணக்கைத் தீர்த்துவைத்தல் வேண்டுமென்பதுடன் அத்தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள்ளாக அதற்கிணங்கக் கட்டளையை ஆக்குதலும் வேண்டும்.

இடைக்காலக் கட்டளை.

833ச. இவ்வத்தியாயத்தின்கீழ் வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் முன்னர் எந்நேரத்திலும் இவ்வத்தியாயத்தின்கீழ் ஆக்குவதற்கு அவர் தத்துவமுடையவராகவுள்ள எவையேனும் ஏற்பாடுகளைக்கொண்ட இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்குதல் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். இக்கட்டளை அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும்வரை நடைமுறையில் இருக்கும்.

கட்டளைகளின் செல்லுபடி.

833உ.(1) பிரிவு 833 (இ) (6) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குப் பின்னர் ஆக்கப்படும் கட்டளையொன்று எவ்வித வலுவும் பயனுடையதாதலாகாது. 833இ என்னும் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் உட்பந்தியில் குறித்துரைக்கப்படும் காலப்பகுதிக்குள்ளாக கட்டளையொன்றை ஆக்கத்தவறும் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி, அவ்வாறு தவறுவதற்கான காரணங்களைக் கூறி, நீதிச்சேவைகள் ஆணைக்குழுத் தலைவருக்கு எழுத்திலான விளக்கமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பிணக்கொன்று தொடர்பாக ஆக்கப்பட்ட கட்டளையொன்று, (1) ஆம் உட்பிரிவின் செயற்பாடு காரணமாக வலுவும், பயனுமுடையதாகாவிடத்து அப்பிணக்குத் தொடர்பில் 833ச என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட இடைக்காலக் கட்டளையும் வலுவும், பயனுமுடையதாதலாகாது.

புதிய வழக்கு நடவடிக்கைகளுக்குத் தடை.

833ஊ. அத்தகைய பிணக்கை உருவாக்கும் அதே நிகழ்வுகளின்மீது அல்லது பொருளளவிலான அதே நிகழ்வுகள்மீது 833இ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழக்கு நடவடிக்கைகள் எவையும் பின்னர் தொடுக்கப்படுதலாகாது.

தகுதிவாய்ந்த நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் வழக்கு நடவடிக்கைகள் கோப்பிலிடப்பட்டவிடத்து.

833எ. இவ்வத்தியாயத்தின்கீழான நடவடிக்கைகளில் விடயப் பொருளாகவுள்ள அதே பிணக்குச் சம்பந்தமான நடவடிக்கைகள் தகுதியான நியாயாதிக்கம் வாய்ந்த நீதிமன்றமொன்றில் அல்லது ஏதேனும் தகுதிவாய்ந்த நியாய சபையில் கோப்பிலிடப்பட்டிருக்குமிடத்து அல்லது கோப்பிலிடப்படுமிடத்து, இவ்வத்தியாயத்தின்கீழ் தொடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் அத்தோடு முடிவுறுத்தப்படுவதுடன் நடவடிக்கையெதுவும் மேலும் எடுக்கப்படுதலாகாது.

பிணக்கானது உடைமை தொடர் பானதாக இருக்கும்போது தீர்மானமும் நீதிவானின் கட்டளையும்.

833ஏ. (1) பிணக்கானது ஏதேனும் காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமை தொடர்பானதாக விருக்குமிடத்து, கோப்பிடப்பட்ட கூற்றினதும், சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசி ஆவணங்களினதும், அடிப்படையில், 833இ என்னும் பிரிவின்கீழ் கூற்றானது பதியப்பட்ட தேதியன்று காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமையை எவர் கொண்டிருந்தாரென்பதுபற்றித் தீர்மானிப்பதும், அத்தகைய காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைக்கு எவர் உரித்துடையவர் என்பதுபற்றிக் கட்டளையை ஆக்குவதும், விசாரணை நடாத்தும் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிவானின் கடமையாதல் வேண்டும்.

(2) ஏதேனும் காணியின் அல்லது ஒரு காணியின் ஏதேனும் பாகத்தின் உடைமை உரிமை தொடர்பிலான பிணக்கொன்றுபற்றிய ஏதேனும் விசாரணையில் அக் காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமையில் இருந்துள்ளவரான எவரேனும் ஆள் 833இ என்னும் பிரிவின்கீழ் கூற்று அல்லது சத்தியக்கடதாசி கோப்பில் இடப்பட்ட தேதிக்கு நேர்முந்திய இரண்டு மாதக் காலப்பகுதிக்குள்ளாக வலோற்காரமாக உடைமையிலிருந்து அகற்றப்பட்டுள்ளாரென கோப்பிலிடப்பட்ட கூற்றுக்களினதும் சத்தியக்கடதாசிகளினதும் அடிப்படையில் நீதிவான் திருத்திப்படுமிடத்து, அப்பயன்படி ஒரு தீர்மானத்தை அவர் ஆக்கலாம் என்பதுடன் தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றின் அல்லது நியாயசபை ஒன்றின் கட்டளையினது அல்லது தீர்வையினது அதிகாரத்தின்கீழ் தவிர அத்தகைய உடைமையைக் குழப்புவதைத் தடைசெய்தும் உடைமையிழந்த கட்சிக்காரரை மீண்டும் உடைமையில் வைக்குமாறு பணித்தும் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று அதன்கண் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஒருவரை அல்லது பலரை, குடியியல் நியாயாதிக்கமுள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் கட்டளை அல்லது தீர்வையொன்றின்கீழ் அல்லது தகுதி வாய்ந்த நியாய சபையொன்றின் கட்டளையின்கீழ், காணியிலிருந்து அல்லது அதன் பாகத்திலிருந்து அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் வெளியேற்றப்படும் வரை, அத்தகைய காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைக்கு உரித்துடையவரென வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளையின் அல்லது தீர்வையின் அதிகாரத்தின்கீழ் தவிர வேறு வகையாக அத்தகைய உடைமையைக் குழப்புவதனைத் தடைசெய்தலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட வெளிப்படுத்துகையுடனும் தடையுடனும் மேலதிகமாக, கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் கட்சிக்காரர் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காணியின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் உடைமையில் மீள அமர்த்தப்படுதல் வேண்டுமென்ற பணிப்பையும் கொண்டிருக்கலாம்.

(5) சூழ்நிலைகள் அவ்வாறு நியாயபபடுத்துகின்ற விடத்து, நீதிமன்றமானது ஒன்றில்—

(i) தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள நீதிமன்றம் அல்லது நியாயசபை உடைமையில் இடப்பட்ட கட்சிக்காரர் அவ்வாறு உடைமைபெற உரித்துடையவரல்லர் எனக் காணுமாயின், உடைமையில் இடப்படும் கட்சிக்காரர், உடைமை மறுக்கப்பட்டதன் விளைவாக விடயத்துக்கேற்றுற்போல மற்றக் கட்சிக்காரர் அல்லது கட்சிக்காரர்கள் அடையக்கூடிய நட்டங்களுக்கு எதிராக தேவையான பணத்தொகையொன்றை பிணைப்பொறுப்பாகக் கொடுத்துதவுமாறு பணிக்கின்ற கட்டளையை ஆக்கலாம், அல்லது

(ii) அத்தகைய காணியிலிருந்து அல்லது அதன் பாகத்திலிருந்து கிடைக்கும் இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் விடையிறுக்கப் பொறுப்பானவரான தனியான பொருளேற்பாளர் ஒருவரை அக்காணியின் அல்லது பாகத்தின் உடைமையில் வைக்கின்ற கட்டளையை ஆக்கலாம்.

(6) நீதிமன்றமானது தனியான பொருளேற்பாளர் ஒருவரை காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமையில் வைத்து கட்டளையொன்றை ஆக்குகின்ற விடத்து, அத்தகைய பொருளேற்பாளர் உடைமை தொடர்பாக தகுதிவாய்ந்த நீதிமன்றம் அல்லது நியாய சபை கட்டளையொன்றை ஆக்கும்வரை உடைமையில் இருத்தல் வேண்டும்.

(7) அத்தகைய காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமையின் தனியான பொருளேற்பாளரொருவரை நியமித்து 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ், நீதிமன்றமானது கட்டளையொன்றை ஆக்குகின்ற விடத்து, காணியை அல்லது அதன் பாகத்தை முறையாக முகாமை செய்வதனையும் பேணுவதனையும் அதன் வருமானத்தைக் கணக்கிடுவதனையும் உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய பொருளேற்பாளர்மீது அது பொருத்தமானது எனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளை அது விதிக்கலாம்.

பிணக்கானது வேறேதேனும் உரிமை தொடர்பானதாகுமிடத்து நீதிபதியின் தீர்மானமும் கட்டளையும்.

833ஒ. (1) பிணக்கானது ஏதேனும் காணியின் அல்லது காணியொன்றின் ஏதேனும் பாகத்தின் உடைமைக்கான உரிமை தவிர்ந்த வேறேதேனும் அத்தகைய காணிக்கான அல்லது அதன் பாகத்துக்கான ஏதேனும் உரிமை தொடர்பானதாயிருக்குமிடத்து, பிணக்கின் விடயப் பொருளாகவுள்ள உரிமையானது எக்கட்சிக்காரருக்கு உரித்தானதென்பதைக் கோப்பிடப்பட்ட கூற்றின் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசியின் அல்லது ஆவணங்களின் அடிப்படையில் சிறு கோரிக்கை நீதிமன்ற நீதிபதி தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

(2) இவ்வுட்பிரிவின் கீழான கட்டளையொன்று அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஆளெவரும் தகைமை வாய்ந்த நீதிமன்றமொன்றின் அல்லது நியாய சபையின் கட்டளையொன்றின் அல்லது தீர்ப்பொன்றின் பயனைக்கொண்டு அத்தகைய உரிமையிலிருந்து நீக்கப்படும்வரையில் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான காணியின் அல்லது காணியின் ஏதேனும் பாகத்திலுள்ள காணி பற்றிய அல்லது காணியின் ஏதேனும் பாகம் பற்றிய ஏதேனும் அத்தகைய உரிமைக்கு உரித்துடையவராதல் வேண்டுமென்று வெளிப்படுத்தலாம். அத்துடன் மேலே சொல்லப்பட்டவாறான கட்டளையொன்றின் அல்லது தீர்ப்பொன்றின் அதிகாரத்தின் கீழல்லாத அத்தகைய கட்சிக்காரரால் அத்தகைய உரிமைகள் பிரயோகிக்கப்படுவதிலுள்ள எல்லா இடையூறுகளையும், தலையீடுகளையும் தடுக்கலாம்.

உடைமைக்கான அல்லது ஏதேனும் உரிமையைப் பிரயோகித்தலுக்கான பிணைப்பொறுப்புக்குக் கட்டளையிடப்படலாம்.

833ஓ. இவ்வத்தியாயத்தின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்று, காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமை உரிமையைப் பிரயோகித்தலுக்கு அக்காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமை உரிமையைப் பிரயோகித்தலுக்கு அக்காணியிலுள்ள உரிமையெதனையும் பிரயோகித்து அல்லது ஏதேனும் பயிரை அல்லது விளைபொருளை விற்பனை செய்தல் தொடர்பாக அல்லது அத்தகைய காணியிலான ஏதேனும் உரிமையைப் பிரயோகிப்பதற்காக அல்லது ஏதேனும் பயிரின் அல்லது உற்பத்திப் பொருளின் விற்பனை சம்பந்தமாக அல்லது அத்தகைய காணியிலான ஏதேனும் உரிமையைப் பிரயோகிக்கும் முறை சம்பந்தமாக அல்லது ஏதேனும் பயிரிலிருந்து அல்லது உற்பத்திப் பொருளிலிருந்து கிடைத்த வரும்படியின் கட்டுக்காப்புக்காக பிணைப் பொறுப்புக் கொடுத்தல் சம்பந்தமாக சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி தகுந்ததென எண்ணக்கூடியவாறான அத்தகைய வேறு பணிப்புரைகளையும் கொண்டிருக்கலாம்.

கட்சிக்காரர் எவரும் தோன்ருதவிடத்தில் கட்டளை.

833ஔ. பிணக்குக்கான கட்சிக்காரர் நீதிமன்றத்தின்முன் தோன்ருதவிடத்து அல்லது தோன்றியிருந்தும் அல்லது கொண்டுவரப்பட்டிருந்தும் சத்தியக்கடதாசிகளையும், ஆவணங்களையும் கோப்பிடுவதற்கு நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் ஆவணங்களுடனுயினுஞ்சரி ஆவணங்களில்லாமலாயினுஞ்சரி எவையேனும் சத்தியக்கடதாசிகளைக் கோப்பிடாதவிடத்து, நீதிமன்றமானது—

(அ) பிணக்கானது உடைமை தொடர்பானதாயிருக்கும் விடயத்தில், உடைமையில் வைத்திருக்கும் கட்சிக்காரர் தொடர்ந்தும் உடைமையில் வைத்திருப்பதை அனுமதிக்கும் கட்டளையை ஆக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பிணக்கானது வேறேதேனும் உரிமை தொடர்பானதாக இருக்கும் விடயத்தில், அவ்வுரிமை தொடர்பாக இதுகாறும் உள்ள நிலை தொடர்ந்திருப்பதனை அனுமதித்துக் கட்டளை ஆக்குதல் வேண்டும்.

எவற்றைக் கருத்திற் கொண்டு நீதிபதி செயற்படலாம்.

833க. இவ்வத்தியாயத்தின்கீழ் தீர்மானமொன்றையும் கட்டளையையும் ஆக்கும்போது சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி கட்சிக்காரர்களால் கோப்பிடப்பட்ட கூற்றையும், சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசிகளையும் ஆவணங்களையும் மட்டும் கருத்துக்கெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வத்தியாயத்தின்கீழ் ஏதேனும் விளக்கத்தின்போது அல்லது விசாரணையின்போது வாய்மூலச் சான்றை அளிப்பதற்குக் கட்சிக்காரர் எவரும் அனுமதிக்கப்படுதலாகாது.

கட்டளைக்கு முரணுக நடத்தற்கு அல்லது இணங்கியொழுகத் தவறுதலுக்கான தண்டம்.

833ங. இவ்வத்தியாயத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு முரணுகச் செயல்படுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதியொருவரால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்குமேல் ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனை அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தகுதிவாய்ந்த நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் நிலை நிறுத்தப்படக் கூடிய உரிமையை அல்லது அக்கறையை, கட்டளை பாதிக்காதிருத்தல்.

833ச. (1) இவ்வத்தியாயத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று ஆளெவரும் தகுதிவாய்ந்த நீதிமன்றம் அல்லது நியாயசபைமுன் நிலைநிறுத்தப்படக்கூடிய தான, ஏதேனும் காணியில் அல்லது அதன் பாகத்தில் உள்ள ஏதேனும் உரிமையை அல்லது அக்கறையைப் பாதித்தலோ அல்லது பங்கப்படுத்துதலோ ஆகாது. அத்துடன் பிணக்குடன் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு இப்பிரிவுகளின் பயனை விளக்குதலும் இவ்வத்தியாயத்தின்கீழ் கட்டளையொன்றை ஆக்கியபின்னர் பிணக்கின் விடயப்பொருளாகவுள்ள காணியிலும் வேறு ஏதேனும் தோதான பகிரங்க இடத்திலும் இப்பிரிவுகளின் பயனை விளக்கும் அறிவித்தலொன்றை ஒட்டச் செய்தலும் இவ்வத்தியாயத்தின்கீழ் விசாரணையொன்றை நடாத்தத் தொடங்குகின்ற சிறுகோரிக்கை நீதிமன்ற நீதிபதி ஒருவரின் கடமையாதல் வேண்டும்.

(2) இவ்வத்தியாயத்தின் கீழான ஏதேனும் தீர்மானமொன்றுக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடொன்று இருததலாகாது.

"காணியைப் பாதிக்கும் பிணக்கு" என்பதன் பொருள்.

833ஞ. இவ்வத்தியாயத்தில் "காணியைப் பாதிக்கும் பிணக்கு" என்பது ஏதேனும் காணியின் அல்லது அதன் பாகத்தின் அத்துடன் அதிலுள்ள கட்டிடங்களின் உடைமைக்கான உரிமைபற்றிய ஏதேனும் பிணக்கு அல்லது ஏதேனும் காணியில் அல்லது காணியொன்றின் பாகத்தில் பயிரிடுவதற்கான உரிமைபற்றிய ஏதேனும் பிணக்கு அல்லது ஏதேனும் காணியின் அல்லது காணியொன்றின் பாகத்தில், பயிர்களின் அல்லது விளைபொருட்களின் உரிமைபற்றிய ஏதேனும் பிணக்கு, அல்லது காணியைப் பாதிக்கும் சேவகமொன்றின் தன்மையான ஏதேனும் உரிமைபற்றிய பிணக்கு என்பவற்றையும் உள்ளடக்குவதுடன் இவ்வத்தியாயத்தில் "காணி" என்பதற்கான ஏதேனும் குறிப்பீடு அதன்மீது அமைந்திருக்கும் ஏதேனும் கட்டிடத்திற்கான குறிப்பீடொன்றையும் உள்ளடக்கும்.

நீதிமன்றத்தின் கட்டளையைப் பிசுக்கால் நிறைவேற்றுதல்.

933ட. பிசுக்கால் அவசியமாகுமிடத்து, இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட எல்லாக் கட்டளைகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

53. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) 135 ஆம் இலக்கப் படிவத்தில் "பிரதம இலிகிதர்" என்ற சொல்லுக்குப் பதிலாக "பதிவாளர்" என்ற சொல்லை இடுவதன் மூலமும், அத்துடன்

(2) 136 ஆம் இலக்கப் படிவத்துக்குப் பதிலாகப் பின்வரும் படிவத்தை இடுவதன் மூலமும் :—

" இல. 136.

(பிரிவு 824)

சிறுகோரிக்கை நீதிமன்றத்தில் சாட்சிக்கு அனுப்பப்படும் அழைப்புக் கட்டளையின் படிவம்.

இல.

எதிர்

என்னும் முகவரியைச் சேர்ந்த
ஆகிய எதிராளி

என்னும் முகவரியைச் சேர்ந்த
என்பவருக்கு நீவிர் இந்நீதிமன்றத்திற்கு, அடுத்த
ஆம் நாளன்று முற்பகல்

மணிக்கு மேற்கூறப்பட்ட வழக்கில் சாட்சியளிக்க வருமாறு தேவைப் படுத்தப்படுகிறீர். (வரும்போது பின்வரும் ஆவணங்களையும் கொண்டு வரவும். அவையாவன,)

பதிவாளர்.

தேதி: 198 ஆம் ஆண்டு மாதம்.

ஆம் நாளன்று."

முதன்மைச் சட்டவாக்கத் துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

54. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையானது, அவ்வட்டவணையின் இறுதியில் பின்வரும் புதிய பாகத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" பாகம் (பிரிவு 833)

சிறுகோரிக்கை நீதிமன்றம்

சிறுகோரிக்கை நீதிமன்றங்களில் பதிவுபெற்ற தாணிகளுக்கு கட்சிக்காரருக்கும் தட்சிக்காரருக்குமிடையேயும், பதிவுபெற்ற தாணிக்கும் வாடிக்கையாளருக்குமிடையேயும் கொடுக்கப்படவேண்டிய செலவுகளினதும் கட்டணங்களினதும் அளவு மாவட்ட நீதிமன்றங்களுக்கு ஏற்புடைத்தான அதே அளவாதல் வேண்டுமென்பதுடன் இவ்வட்டவணையின் I ஆம் II ஆம் பாகங்களில் குறித்துரைக்கப்பட்டனவாக இருத்தலும் வேண்டும்".